|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 12 சோபகிருது ஹூ ஆடி - ஆவணி மீ ஆகஸ்ட் - 2023 இதழ் 8

## அரசாள்வார் ஆணை நமதே



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## ஆடி – ஆவணி

மலர் 12 ஆகஸ்ட் - 2023 இதழ் 8

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 10 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 15 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| முகாம் நிகழ்ச்சிகள் | 19 |
| பக்த மீராவின் க்ருஷ்ண கீதங்கள் | 23 |
| ராஜ தரங்கிணி | 25 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 28 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 33 |
| ஆவணி மாத விசேஷ தினங்கள் | 35 |
| பெரிய புராணமும் அத்வைதமும் | 36 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 40 |
| புராணக் கதை | 42 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 44 |
| மகாபாரத சுருக்கம் | 46 |
| தசாவதார ஸ்தோத்ரம் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்








## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

*''எங்கும் செல்லும் சக்திவாயந்தவளும், மங்களஸ்வரூபியும், ப்ரியமானவளும் க்ருபை புரியபவளுமான மேதா தேவி எழுந்தருளட்டும். தேவியே! உன்னால் அனுக்ரஹிகப்பட்ட நாங்கள் ஞான ஒளி பெற்று துர் வசனங்களை விட்டொழித்து வீரர்களான புத்ரர்களுடனும் பரமாத்வைப் பற்றிய சிறந்த வார்த்தைகளை பேசுவோமாக.*

*உன்னால் அனுக்ரஹிக்கப்பட்டவன் ரிஷியாகி விடுகிறான். உன்னால் அனுக்ரகிகப்பட்டவன் ப்ரம்மாவாகி விடுகிறான். உன்னால் சீர்மை வந்தடைகிறது. உன் அருள் பெற்றவன் பல விதமான செல்வத்தைப் பெறுகிறான். அப்படிப்பட்ட நீ எமக்காகக் குபேரனது செல்வத்தைப் போன்ற செல்வத்தைக் கூட்டி வைத்தருள்வாயாக.*

*இந்த்ரன் எனக்கு புத்தி சக்தியை அளிக்கட்டும். ஸரஸ்வதி தேவி புத்தி சக்தியை அளிக்கட்டும். தாமரை மாலை அணிந்த அஸ்வினீ தேவர்கள் எனக்குப் புத்தி சக்தியை அளிக்கட்டும். கந்தர்வர்களிடம் எந்த மனோசக்தி ப்ரஸித்தமோ தேவர்களிடம் உள்ள புத்தி சக்தி ஸரஸ்வதியாக உள்ளதோ அது காமதேனுவைப் போல் அனைத்தையும் அளிக்க வல்லதாய் என்னை வந்தடையட்டும்.*

*மேதா ஸூக்தம்*

# ஆசிரியர் பக்கம்

செங்கோல் செங்கோல் என்று கடந்த மாதம் எங்கும் ஒலித்தது. உண்மை. நமது நாடு சுதந்திரத்தின் அடையாளமாக ராஜாஜி சொல்ல திருவாவடுதுறை ஆதீனம் மூலமாக ஒரு செங்கோல் செய்யப்பட்டு அது ப்ரதமர் நேருவிடம், மௌண்ட் பேட்டனிடம் கொடுத்தபின் ஆசீர்வதிப்பபட்டு திருஞானசம்பந்தர் தேவார அருளுடன் கொடுக்கப்பட்டது. அதன் அருமை தெரியாமல் Golden walking stick என்று வெறும் கைத்தடியாக மாறி அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது. அந்த செங்கோலை ஸ்ரீ மோடி அவர்கள் மீண்டும் நமது புதிய பார்லிமெண்ட் கட்டடத்தில் ப்ரதிஷ்டை செய்தது மிகச்சிறந்த செயல்.

அவருக்கு நாம் அனைவரும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம். இதற்காக எவ்வளவு வாதப் ப்ரதிவாதங்கள். எதிர்கட்சியினரின் வாதங்கள் அபத்தமானைவை. 1947ஆம் வருடம் நடந்த அந்த நிகழ்சியைப் பற்றி நாம் ஆகஸ்ட் 2020 ப்ரதீப இதழில் எழுதியிருந்தோம். செங்கோல் என்பது நேர்மையான அரசாட்சியின் அடையாளம். இதைக் கையில் வைத்துக் கொண்டு நீதி பரிபாலனம் செய்து வந்தனர் அந்த கால மன்னர்கள். இது தமிழ் நாட்டிற்கே உரித்தான ஒன்று. வடமொழியில் இதை ‘தர்ம தண்டம்’ என்றும் இது எப்படி அரசனிடம் உயர்ந்தது, அப்படி ஆள்கிறது என்று பல நூல்கள் கூறுகின்றன. சிலவற்றைப் பார்ப்போம்.

‘உயிர்களனைத்தையும் பிறக்கும் பொருட்டு அறத்தின் வடிவமானதும், ஒளி பொருந்தியதுமான செங்கோலைப் ப்ரம்மன் படைத்தான். கோலுக்கு அஞ்சியே சராசங்கள் இன்பம் துய்ப்பதுடன் தத்தம் நெறிகளையும் விடாது ஒழுங்குவனவுமாகும். தண்டமே அரசனது மேன்மையைக் குறிக்கும். நான்கு ஆஸ்ரமங்களுக்கும் அரணாகவும் உள்ளது.

எல்லா மக்களையும் ஆணையிடுகிறது, காக்கிறது, மற்றவர் தூங்கும்போதும் அது விழிப்புடன் இருக்கிறது.எனவே அறமே செங்கோல் என்று அறவோர் கூறுவர்.

**தண்ட நீதி நங்கு செலுத்தப்பட்டால் குடிகள் இன்புறுவர்**
**சாய்ந்தால் யாவையும் அழியும்.**

(மனு தர்மம் 7ஆம் அத்யாயம்)

அரசனே இந்த செங்கோல் நான்கு வர்ணங்களையும் தம்தம் தர்மங்களில் அடக்கி வைக்கும். அனைவருக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கும். குடிகளைக் காக்கும். தர்மம், அர்த்தம், காமம் இவைகளைக் கொடுக்கும். இதன் பயத்தாலேயே மக்கள் ஒழுங்காக ஒழுகுவர். தர்ம தண்டமே உலகைக் காக்கும். (மகாபாரதம்)

**வான் நோக்கி வாழும் உலகு எல்லாம் மன்னவன்**
**கோல் நோக்கி வாழும் குடி**

மன்னவனின் செங்கோலை அடிப்படியாக வைத்தே உலகம் இயங்கும்.

**அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்**
**நின்றது மன்னவன் கோல்**

அந்தணர்கள் செய்யும் அனைத்து தர்மத்திற்கும் அடிப்படையாய் இருப்பது செங்கோன்மை

**வேலன்று வெற்றி தருவது மன்னவன்**
**கோல் அதுஊம் கோடாது எனின்.**

வெறும் படைகலனால் வருவது வெற்றி அல்ல. செங்கோன்மையால் வருவதே வெற்றி.

( செங்கோன்மை திருவள்ளுவர்)

செங்கோல் சார்ந்தது செங்கோன்மை. அதாவது பாரபக்ஷமின்றி நடு நிலையுடன் நீதி வழங்குவதே இதன் தாத்பர்யம். 'யானோ அரசன் யானே கள்வன்' என்று கண்ணகியின் முன் அரசவையில் பாண்டிய மன்னன் இறந்தது இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். நான்கு யுகங்களிலும் எப்படி நீதி வழங்கப்பட்டது என்று மகாபாரதம் விரிவாகப் பேசும். செங்கோல் தடி ஓர் அடையாளம்தான். செங்கோன்மை என்னும் தாத்பர்யத்துடன் அரசன் அரசாள வேண்டும்.

இன்று இந்த நிலைக்கு அச்சாரம் செய்யப்பட்டுள்ளது. எங்கோ தடியாக இருந்த செங்கோலை நமது பாரத ப்ரதமர் மீண்டும் புதிய பாராளுமன்றக் கட்டிடத்தில் மிக பயபக்தியுடன் ஆதீன பெருமக்களுடன் ப்ரதிஷ்டை செய்துள்ளார். சாலச் சிறந்த செயல்.

ஓர் யுகபுருஷர் போல் அவர் விளங்குகிறார். இதுவரை அவர் செய்து வரும் மாற்றங்களால் நாடு முன்னேற்றம் கண்டுள்ளது மேன்மேலும் தன்னிறைவு அடைய இம்மாதிரி ஸம்பவங்கள் துணை புரியும். இதில் கலந்துள்ள ஆன்மீகம் நமது கலாசாரத்திற்கு வெண் சாமரம் வீசுகிறது. இது பற்றி பல பத்ரிகைகள் இப்போது பேசினாலும் ஆகஸ்ட் 2020-ல் நாம் தலையங்கம் எழுதினோம். வாசகர்கள் படித்துப் பார்க்கவும். இந்த நிகழ்ச்சியினால் இழந்த சொர்கம் மீண்ட சொர்கமாயிற்று. தமிழுக்குப் பெருமை சம்பந்தர் தேவாரத்திற்குப் பெருமை. தமிழ் ஆதீனங்களுக்குப் பெருமை. ஏன் நம் நாட்டிற்கே பெருமை. கோளறு திருப்பதிகத்தில் கூறியபடி ‘அடியார்கள் அரசாள்வர் ஆணை நமதே’ என்னும் திருஞானஸம்பந்தர் வாக்கு பலிதமாகவும் நாடு செழிக்கவும் இறை அருளைப் ப்ரார்த்திப்போம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.


‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஆதி வார்த்தை அந்தத்திலும்

'ஷட்பதீ' ஆரம்ப ச்லோகத்தில் 'அவிநயம் அபநய' என்று தொடங்கினார். ஆறாவது ச்லோகத்தை முடிக்கிற போதும் 'தரம் அபநய த்வம் மே' என்பதாக அதே 'அபநய' என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறார். ஆதி வார்த்தையே அந்தத்தில் வருவதால் circle complete ஆகிவிடுகிறது (வட்டம் பூர்த்தியாகி விடுகிறது). இது ஸ்தோத்ரத்தின் பூர்ணத்வத்துக்கு அடையாளம்.



'அபநய' என்பதற்கு அப்புறம் 'த்வம்', 'மே' என்ற இரண்டு வார்த்தைகள் வந்தாலும், மேலே காட்டின மாதிரி எனக்கு மஹாபயத்தை நீ போக்குவாயாக' என்பதற்கு நேர்வாக்யம், 'மே பரமம் தரம் த்வம் அபநய' என்று அபநயவைக் கடைசி வார்த்தையாக வைத்து முடிப்பதாகத்தானிருக்கும். வசன நடையில் அப்படித்தான் இருக்கும். கவிதையானதால் அதன் லக்ஷணங்கள் பொருந்துவதற்காக இப்படி 'அபநய'வை கொஞ்சம் முன்பே கொண்டு வந்து 'மே' என்று முடிக்கும்படி ஆயிற்று.

பகவத் கீதையில் இப்படியேதான் இருக்கிறது. அதிலே பகவானின் உபதேசம் இரண்டாம் அத்யாயத்தில் **'அசோச் யாந் அந்வசோசஸ்த்வம்'** என்கிற (11-வது) ச்லோகத்தில்

ஆரம்பிக்கிறது. கடைசியில் பதினெட்டாவது அத்யாயத்தில் 66-வது ச்லோகத்தில்,

**ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ ।**
**அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச : ॥**

என்று உபதேசத்தை முடிக்கிறார்.

இந்த இரண்டிற்கும் முந்தியும் பிந்தியும் இருக்கிற ச்லோகங்கள் Preface (முன்னுரை) Epilogue (பின்னுரை) தான்.

'சுச' - 'சோச்ய' என்கிற வார்த்தைகள் 'வருத்தப்படுவதை'க் குறிக்கும். முதலில், **'அசோச்யாந் அந்வ சோசஸ் த்வம்'** என்றதற்கு வருத்தப்பட வேண்டாதவர் விஷயத்தில் நீ வீணுக்கு வருத்தப்படுகிறாய்' என்று அர்த்தம். 'ஐயோ, இந்தக் கௌரவ ஸேனையை எப்படிக் கொல்வேன்?' என்று வருத்தப்பட்ட அர்ஜுனனிடம், 'தர்மத்தை உத்தேசித்து இந்த யுத்தம் நடந்தாக வேண்டியிருக்கிறது. பூபாரம் தீருவதற்காக, இவர்கள் எல்லாரும் ஸம்ஹாரம் ஆக வேண்டும் என்று ஏற்கெனவே ஈச்வர ஸங்கல்பமாகிவிட்டது. ஆகையால் நீ வருத்தப்பட வேண்டாதவர்களுக்காக அநாவச்யமாக வருத்தப்படுகிறாய்!' என்று சொல்ல வந்த பகவான், **'அசோச்யாந் அந்வசோசஸ்த்வம்'** என்று ஆரம்பிக்கிறார். கடைசியில் முடிக்கிறபோது, 'எல்லாத் தர்மங்களையும் விட்டு விட்டு (அதாவது, எல்லா தர்மங்களுக்கும் மேலாக) என்னிடம் சரணாகதி பண்ணி, நான் விட்டவழி என்று இருந்துவிடு. நான் உன்னை ஸகல பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன். இது நிச்சயம். ஆதலால் கொஞ்சங்கூட வருத்தப்படாதே'' என்று அர்ஜுனனுக்குத் தன் வாக்குறுதியைக் கொடுக்கிறபோது 'மா சுச:' என்கிறார். 'மா சுச:' என்றால் 'வருத்தப்படாதே' என்று அர்த்தம். ஆரம்பத்தில் வந்த 'அசோச', முடிந்த முடிவில் வரும் 'மா சுச' இரண்டும் ஒன்றேதான். 'சுச்' என்கிற root (தாது) இரண்டிற்கும் பொது.

கீதையில் போலவே ஷட்பதீயிலும் முதல் ச்லோக ஆரம்பத்தில் வந்த 'அபநய' ஆறாம் ச்லோக முடிவிலும் வருகிறது. 'விநயமின்மையைப் போக்கு' என்று ஆரம்பித்தவர் 'பயத்தைப் போக்கு' என்று முடிக்கிறார். போக வேண்டியதைப் போக்கிக் கொள்ள வேண்டியது, வரவேண்டியதை வரவழைத்துக் கொள்வதைவிட முக்யம். முதலில் இதைச் செய்து கொண்டால்தான் அப்புறம் அதைச் செய்து கொள்ள முடியும். செய்து கொள்வது, போக்கிக் கொள்வது என்றாலும் அது நம்மாலாகிற கார்யமா? இல்லை.

அவனுடைய அருள்தான் அப்படிப் போக்க வைக்க வேண்டும். அதனால் தான் ஆரம்பம் முடிவு இரண்டிலும், போக வேண்டிய இரண்டை–திமிரையும், பயத்தையும்-போக்கு, 'அபநய', என்று வேண்டிக் கொள்கிறார். பயம் என்பது திமிருக்கு நேரெதிர். பூஞ்சை மனஸைக் காட்டுவது. உத்தமமானவருக்குத் திமிரும் இருக்காது. பூஞ்சையான பயங்காளித்தமும் இருக்காது. நமக்கு இரண்டும் இருக்கிறது. சிலவற்றைக் குறித்து திமிர், சிலவற்றைக் குறித்து பயம் என்று இருக்கிறது. இது இரண்டையும் போக்கிக் கொள்ள பகவானை ப்ரார்த்திக்கச் சொல்லிக் கொடுக்கிறார் ஆசார்யாள்.


ஒரு ச்லோகத்தின் முடிவு வார்த்தை அடுத்ததன் ஆரம்பமாக இருப்பதைத்தான் அந்தாதி என்பது. 'உத்த்ருத நக' வில் ஒரே ச்லோகத்துக்குள்ளேயே ஆசார்யாள் அந்தாதி விளையாட்டுப் பண்ணியதைப் பார்த்தோம். இப்போது ஆறு ச்லோகம் கொண்ட முழு ஸ்தோத்ரத்துக்குமாகச் சேர்த்து முதல் வார்த்தையான 'அபநய' என்பதையே கடைசியிலும் போட்டு ஒரு விநோதமான அந்தாதி பண்ணியிருப்பதைப் பார்க்கிறோம். முதல் வார்த்தை, கடைசி வார்த்தை என்பதற்குப் பதில் முதல் வினைச்சொல், கடைசி வினைச் சொல் என்று வைத்துக் கொள்வதுதான் இன்னும் ஸரியாயிருக்கும். முதல் வார்த்தை 'அவிநய' என்பதே. அதையடுத்து முதல் வினைச் சொல்லாக 'அபநய' வருகிறது. கடைசி வார்த்தைகள் 'அபநய த்வம் மே'. 'அபநய'வுக்கு அப்புறம் 'த்வம் மே' இருக்கிறது. ஆனால் வினைச் சொல்லில் எது கடைசி என்று பார்த்தால் 'அபநய' தான்!

Verb என்பதைத் தமிழில் வினைச்சொல் என்றும், ஸம்ஸ்க்ருதத்தில் க்ரியா பதம் என்றும் சொல்கிறோம். இதிலிருந்து, அது ஒரு வேலையைக் கொடுப்பது என்று தெரிகிறது. இப்படி, நம்மை விடாமல் ஒரு வேலை வாங்குவதற்கே ஸூக்ஷ்மமாக இப்படி ஷட்பதீ ஸ்தோத்ரம் முழுவதையும் வினைச் சொல்லால் ஒரு அந்தாதியாக ஆசார்யாள் பண்ணி யிருக்கிறார் போலிருக்கிறது! ஆரம்ப verb-ஐ முடிவிலே போட்டதால், 'மறுபடியும் **'அவிநயம் அபநய'** என்று அந்தாதிக்ரமத்திலே ஆரம்பி. அதாவது, திரும்பத் திரும்ப இந்த ஸ்தோத்ரத்தை ஜபம் பண்ணு'' என்று வேலை கொடுக்கிற மாதிரி இருக்கிறது !

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## சிறப்பு அருளுரைகள்



அர்ஜுனன், சஞ்சயன் இரண்டு பேர் காதிலே தான் விழுந்தது. கோடானு கோடிப்பேர் மத்தியில் உபன்யாசம் பண்ணியும் ஒருத்தர் காதில் கூட விழாமல் அர்ஜுனன் காதிலேயும் சஞ்சயன் காதிலேயும் மட்டும்தான் விழுந்தது.

அதுதான் கீதை. ஆனால் அதுவே வியாச முனிவரால் எழுதப்பட்டு இன்றைக்கு கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் புத்தகங்களாகப் போய்விட்டது. நம்முடைய துக்கம் போவதற்கு வழியே கீதா சாஸ்திரம்தான் என்று சொல்லப்படுகிறது.

கடைசியிலே அர்ஜுனன் சொல்கிறான்: ''என்னுடைய துக்கங்கள் எல்லாம் போய்விட்டது. மோகங்கள் எல்லாம் போய்விட்டது. எதற்காக நான் வந்தேனோ அது தெரிந்து விட்டது. பகவானுடைய அனுக்கிரகம் இல்லாவிட்டால் இந்த காமம் போகாது, துவேஷம் போகாது, அகம்பாவம் போகாது, மோகம் போகாது.. ஈகோ போகாது....

இப்போது நான் தயாராக இருக்கிறேன். சந்தேகம் எல்லாம் போய்விட்டது. 18 அத்தியாயங்களைக் கேட்டுக் கேட்டு சந்தேகங்கள் எல்லாமே நிவர்த்தியாகி விட்டது. இனிமேல் நான் எதுவும் கேட்பதாக இல்லை. ஆனால் செய்கிறேன். இனிமேல் நீ சொல்கிறபடி நான் நடக்கிறேன்'' என்றான்.

'நீ சொல்கிறபடி இனி நான் நடக்கிறேன் என்று என்றைக்கு நாம் பகவானிடம் சங்கல்பம் எடுக்கிறோமோ, அன்றைக்குத்தான் அதீதா சென்டரின்' காரியம் பூர்த்தியாகும்.

அந்த அளவுக்குக் குருவைப் பிரதானமாக வைத்தும், ஆதிசங்கரரைப் பிரதானமாக வைத்தும் குருபக்தியின் மூலமாகத்தான்

முன்னேற வேண்டும் என்பதற்கு அடையாளமாகவே இந்த விழா நடை பெறுகிறது.

எல்லோரும் இதுபோன்ற சத்சங்கங்களில் ஈடுபட வேண்டும். நல்ல விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். தத்துவங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். வேதங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நல்ல விஷயங்களைக் கேட்டால் மனசுக்கு நல்ல சம்ஸ்காரம் கிடைக்கும். சத்சங்கத்திலே கண்டிப்பாக ஈடுபட வேண்டும்.

**சத் சங்கத்துவே நிர்சங்கத்துவம்**
**நிர்சங்கத்துவே நிர்மோகத்துவம்**
**நிர்மோகத்துவே நிர்சலதத்துவம்**
**நிற்சலத்துவே ஜீவன் முக்தி**

நாலு பேர் கூடி நின்று உட்கார்ந்து பேசிக் கொள்வது மட்டும் சத்சங்கமாகாது. சத்சங்கம் என்றால் ஆத்மா சம்பந்தமாகப் பேசிக் கொள்ள வேண்டும். அதுதான் சத்சங்கம்.

பரமாத்மா பற்றி எப்போது சிந்தனை பண்ணுகிறோமோ அப்போதுதான் சத்சங்கம். பரமாத்மாவைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் பிறகு வேறு எந்தப் பற்றுமே இருக்காது. எல்லாமே விலகி ஓடிவிடும்.

மனதிலே பற்றே இல்லாமல் இருந்தால் மோகம் எங்கிருந்து வரும்? மோகம் இல்லாவிட்டால் சஞ்சலம் எங்கிருந்து வரும்?.

மோகம் இருந்தால் அதுவேண்டும், இது வேண்டும் என்று கேட்கிறோம். அது கிடைக்கவில்லையென்றால் உடனே சஞ்சலம் ஆகிவிடுகிறோம். புலம்புகிறோம். மோகமே இல்லாவிட்டால் மனது சஞ்சலமின்றி அமைதியாக இருக்கும் அல்லவா?.

மனம் ஒருமைப்பாட்டோடு ஒரே நிலையிலே இருந்தால், பகவானைப் பற்றிய நினைப்புடனே இருந்தால் மனம் சமாதானமாக இருக்கும், சாந்தி கிடைக்கும்.

மற்ற எல்லாமே வெளியிலே கிடைக்கும். சாந்தி, சுகம் வேண்டுமானால் ஈஸ்வர சிந்தனை, சத்சங்கம் எல்லாம் வேண்டும்.

நல்ல விஷயங்களைக் கேட்க மனம் வரவேண்டும். நல்லதைக் கேட்பதால் நமக்கு இரண்டு பங்கு லாபம்.

நல்லதைக் கேளு... நல்லதைக் கேளு... நல்லதைக் கேள்... நல்லதைச் சொல்பவர்களுக்கு அதைத் தூண்டி விட்ட ஒரு லாபம், அதைக் கேட்டதால் கேட்டவர்களுக்கு ஒரு லாபம். ஆக கேட்பவர்களுக்கு இரண்டு பங்கு பலன் உண்டு.

கெட்டவற்றைச் சொல்பவர்களுக்கு ஒரு பங்கு பலன் உண்டு. கேட்பவர்க்கு இரண்டு பங்கு பலன் உண்டு. அதுதான் இன்றைக்கு நாட்டிலே நடக்கிறது. நாம் நல்லவனாகவே இருப்போம். முதலில் கெட்டதைக் கொஞ்சம் கொஞ்சம் பார்த்துக் கொள்கிறோம். ஒரு தமாஷுக்குத்தானே என்று பார்க்கிறோம்.

கெட்டதைச் சொல்பவனுக்கு ஒரு பங்குதான் பலன். அதனால் சௌக்கியமாய் இருந்து கொண்டு இருக்கான். நமக்கு இரண்டு பங்கு தண்டனை என்பதால் நாம் இரண்டு மடங்கு கஷ்டப்படுகிறோம். இதை நாம் நன்கு புரிந்து கொண்டாலே போதும்.

நல்லதைச் செய்யணும். நல்லதைப் பார்க்கணும். நல்லதைக் கேட்கணும். நல்லதையே பேசணும். நல்லதையே சாப்பிடணும்.

ஒன்று ஞானேந்திரியம், இன்னொன்று கர்மேந்திரியம். பேசறது கர்மேந்திரியம். ருசியை இனிப்பு, காரம் என்று அனுபவிப்பது ஞானேந்திரியம்.

நல்லதையே பேசணும். நல்லதையே சாப்பிடணும். நல்லதை மட்டும் சாப்பிட்டால் எல்லாம் நல்லதாகும். நல்லதைச் சாப்பிடாவிட்டால் எல்லாமே குழப்பம் தான்.

ஒரு விழாவை காரணமாக வைத்து நல்லதைப் பேசினால் நல்லது; அது மனதில் படும்.

எப்போதும் நல்லதே பண்ணு. நல்லதே பேசு. நல்லதையே முகர்ந்து பார்... என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

கண்ணை மூடி, வாயைப் பொத்தி உட்காரு என்று சொல்வது இல்லையா? ஏன்?

எல்லாவற்றையும் நல்லதாகவே பண்ணு என்பதற்காகச் சொன்னார்கள். நாமே விட்டுவிட்டால் பந்தம். அது நம்மை விட்டால் ஆனந்தம். இதுதான் வேதாந்தம்.

நாமே விட்டால் பந்தங்கள் வந்து சேரும். அதுவே விட்டுவிட்டால் பந்தங்களே வராது. ஆகையினால் நமக்கு சுலபமாக இருப்பது வேதாந்தம். நம்முடைய பொருள் ஒன்று திருட்டு போய்விட்டது என்றால் சங்கடப்படுகிறோம், வருத்தப்படுகிறோம். யாருக்காவது நாமே ஒரு ஐந்து போட்டோமென்றால் அது சந்தோஷமாக இருக்கும். நம்மை அறிந்து நம்மை விட்டுப் போனால் அது சந்தோஷத்தைக் கொடுக்கிறது. நமக்குத் தெரியாமல் யாராவது ஏமாற்றி எடுத்துக் கொண்டு நம்மை போனால் சங்கடத்தைக் கொடுக்கிறது.

நாமே சிந்தனை பண்ணி நமக்குத் துக்கம் வரக்கூடாது, கவலை வரக்கூடாது, ஏமாற்றமும் வரக்கூடாது, நோய்

வரக்கூடாது என்று எவ்வளவோ நினைக்கிறோம். ஆனால் அத்தனையும் மீறி வருகின்றதே...

ஏன்?

நம் மனது இவை அத்தனையும் நினைத்துக் கொண்டே இருக்கிறது. நல்லதை நினைத்தால் நல்லது நடக்கிறது. கெட்டதை நினைத்தால் கெட்டதுதான் நடக்கிறது. அதுதான் வளர்கிறது.

நம்முடைய வேதாந்தம் ஒரே வரியில் சொல்லி விட்டது. 'நீயும் நானும் ஒன்றுதான்' என்று.

நீயும் நானும் ஒன்று என்று ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்ள வேண்டும். அப்படி நினைத்துக் கொண்டு ஒன்றாகவே இருக்க வேண்டும்.

நீ யார் என்று ஒரு மனிதனைப் பார்த்துக் கேட்கிறோம். உதாரணமாக-பாலசுப்பிரமணியனைப் பார்த்து 'நீ யார்?' என்று கையால் ஆட்டிக் கேட்கிறோம். அப்போது பாலசுப்பிரமணியம், 'நான் பாலசுப்பிரமணியம்' என்று தனது கையை ஆட்டிப் பதில் சொல்கிறார்.

நீ யார் என்று கேட்பவனும் நான் யார் என்று சொல்பவனும் ஒரே ஆளாகத்தான் இருக்கிறான். கேட்பவனும் பதில் சொல்பவனும் ஒருவனாகவே இருக்கிறான்.

ஒரே ஒரு ஆள்தான் இப்படி இரண்டு பேராக இருக்கிறான். இதைத்தான் அத்வைதமும் சொல்கிறது. மனதில், பாவனையில் எல்லாமே ஒன்று என்று முதலில் நினை. உலகில் உள்ள எல்லாமே ஒன்றுதான் என்று பாவனையில் நினைத்து கொள்ள வேண்டும்.

எல்லோருமே நல்லா இருக்க வேண்டும்... என்று எப்போதுமே எல்லோருமே சிந்தித்து இருக்க வேண்டும்.

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றுமே அறியேன் பராபரமே'' என்றார் தாயுமானவர்.

ஒரே ஆத்மாதான் எல்லோருக்குள்ளும் இருக்கிறது எங்கும் நிறைந்திருக்கிறது. எல்லோர் மனத்திலும் இருப்பது ஒரே ஆத்மாதான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

நீ யார்... நீ யார்... என்று உன்னையே தான் நீ கேட்டுக்கொள்கிறாய். எல்லாரும் ஒருவரே என்பதால் குரு யார், சிஷ்யன் யார் என்று கேட்க முடியாது.

மற்ற மதத்தினர்கள் என்னிடம் கேட்டார்கள்.

நான் ஒரு புஸ்தகம் சம்ஸ்கிருதத்திலே எழுதியிருந்தேன். அதிலே முதலில் ஒரு கேள்வி வருகிறது.

அத்வைதம் — எல்லாமே ஒன்று என்று சொல்கிறீர்களே... அப்படி என்றால் குருவும்

சிஷ்யனும் ஒன்றாக முடியுமா? என்று கேட்கிறார்கள்.

தெரிந்தவன் ஞானி. தெரியாதவன் ஞானி இல்லை. எல்லாம் ஒன்று என்றால் எப்படி குரு சிஷ்யப் பரம்பரை வரமுடியும்?

குரு, சிஷ்யன் இருவரும் இரண்டு வேறானவர்கள் என்றால் அது துவைதம் ஆகிவிடுகிறது!

ராமாயணத்தில் ராமர் அவதாரம் எடுக்கிறார். பரசுராமன் ஒரு அவதாரம் எடுக்கிறார். இரண்டு பேருமே ஸ்ரீநாராயணருடைய அவதாரங்கள்.

ராமனுக்குத் திருமணம் முடித்துவிட்டு வரும் போது பரசுராமன் வந்து, தனது சக்தி எல்லாவற்றையும் ராமனிடம் கொடுத்து விடுகிறார்.

இன்றைக்கும் பரசுராமர் சிரஞ்சீவி. ஆனால் அன்றைக்கே ராமரிடம் தனது சக்தி முழுவதையும் கொடுத்துவிட்டுக் காட்டுக்குப் போய்விட்டாரே தனியாக.

அப்போது பரசுராமனும் ஒரு ஈஸ்வரன். ராமனும் ஒரு ஈஸ்வரன். இரண்டு பேருமே ஈஸ்வரனாக இருந்ததாக இராமாயணத்திலே இருக்கிறது.

ஒரே நாராயண ஸ்வரூபமுள்ள இரண்டு பேர்- ராமனாகவும், பரசுராமனாகவும் இருந்து பேசி, கொடுத்ததும் பெற்றதும் லீலைகள்.

அதுபோலத்தான் சிஷ்யனுக்காக குருவே இறங்கி வந்து உபதேசம் பண்ணினார்.

ஞானி என்றால் பரிபூரண ஞானம் அடைந்தவர். ஆனால் உலகம் தெரியாதவர் என்று அல்ல. உலகம் ஒன்றாகத் தெரியும். ஆனால் அதிலே பாதிக்கப்படாமல் இருப்பவர்.

மின்விசிறி ஓடிக்கொண்டு இருக்கும் போது இடையிலே கையை நீட்டினால் அடிபடும். ஆஃப் பண்ணினால் மெல்ல சுத்தும். அப்போது கையை நீட்டினால் அடிபடாது.

அதுபோல அஞ்ஞானியாக இருக்கும் போது புண்ணிய பாவங்கள் உண்டு. ஓடும் மின்விசிறியில் கைநீட்டினால் அடிக்கும். ஞானியாக இருக்கும்போது, அதாவது ஃபேனை நிறுத்திய பிறகு தொட்டால் அடிக்காது.

அதுபோல ஞானிக்கு எதுவுமே தெரியாது என்று அல்ல. எல்லாமே தெரியும். ஆனால் அதை நிஜமானதாக அவர் பார்க்க மாட்டார்.

புண்ணிய பாவங்களாக பார்க்க மாட்டார்; சத்தியத்தை மட்டுமே பார்ப்பார்; கெடுதலைப் பார்க்க மாட்டார்; தப்பைப் பார்க்க மாட்டார்; எல்லாவற்றையுமே சத்தியமாகவே பார்ப்பார்.

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஸ்கந்த ஷஷ்டி தொடர்ச்சி



தர்மத்தைப் பற்றி நம்பிக்கை குறைவாக இருந்த நேரத்திலே, கோவில் தேவையா, சாஸ்திரங்கள் தேவையா? ஆசாரங்கள், கை கால் அலம்பிக்கனுமா? வாய் கொப்பளிக்கனுமா? இது மாதிரி எல்லாம் ஆரம்பித்து, ஆசாரங்கள் தேவையா. நம்ம சொல்றோம்- **ஆகார சுத்தௌ, சத்வ சுத்தி: ஆசார ஹீனம் ந புனந்தி வேதா:** வேதாத்யாயனம் பண்ணும் போது, இது ஒரு படிப்பு மாத்திரம் இல்ல. இது படிப்போடு சேர்ந்து, ஆசாரத்தோடு சேர்ந்து, குணங்களோடு சேர்ந்து இது ஒரு வித்யை. இது ஒரு ஸ்கூல். இதிலே ஒரு வித்யை சொல்லித் தரா. காலேஜ் இருக்கு, அங்கு வித்யை சொல்லித் தரா.

University இருக்கு. அங்கு படிப்பை சொல்லித் தரா. அதிலே, ஆயிரக்கணக்கான ஜனங்கள் படிக்கிறா. நூறு இல்ல. ஆயிரம், லட்சக்கணக்கானோர் படிக்கிறா. அந்தப் படிப்பிலே இருந்து உங்கள் படிப்பு வித்யாசமானது, விஷிஷ்டமானது. வித்தியாசம்-அந்தக் காலேண்டர் வேற, உங்கள் காலேண்டர் வேற. அங்கு சனி , ஞாயிறு லீவ். உங்களுக்கு அஷ்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பிரதமை. அஷ்டமி, சதுர்த்தசி, பௌர்ணமி, பிரதமை. உங்களுடைய time table வேற. சாப்பிடுவதற்கு முன்னாலே, பிரம்ம யக்னம் சொல்லனும். அவாளுடைய time table வேற. இது மாதிரி, வித்யாசங்கள் நிறைய இருக்கு. நீங்கள் ஆரம்பத்திலே என்ன? - ஸ்ரீ குருப்யோ நமஹா, ஹரிஹி ஓம் என்று பூர்த்தி பண்ணும் போது சொல்லனும். தினமும் உங்களுடைய அட்ரஸ் சொல்லனும். செல் போன் அட்ரஸ், ஆதார் அட்ரஸ் அது வேற. மூனு ரிஷியா, ஐந்து ரிஷியா, ஏழு ரிஷியா -

அந்தந்த ரிஷிகளை சொல்லணும். காத்யாயனர், ஆபஸ்தம்பர், போதாயனர், சௌநகர் இந்த மாதிரியான ரிஷிகளை, சூத்திரகாரர்களை சொல்லி, இதைத் சேர்ந்தவன், இதைப் படிக்கப் போறேன், எல்லாம் சொல்லி, வாத்தியாருக்கு நமஸ்காரம் பண்ணி, அந்த மாதிரி, குரு பக்தியோட, குரு சேவையோட, குரு சுஸ்ரிஷையோட, ஆசாரத்தோட, மந்திர ஜபத்தோட, காயத்திரி மந்திரத்தை தினமும் ஜபம் பண்ணி, அர்க்கிய பிரதானம் பண்ணி, சமிதா தானம் பண்ணி, இந்த மாதிரியெல்லாம் படிக்க வேண்டிய வித்தை, இந்த வித்தை. வைஷிச்டியம். வித்தியாசம் சொன்னோம். எந்த விதத்தில் உயர்ந்தது என்று சொன்னால், இதன் மூலமாக, நீங்கள் ஜனங்களுக்கு நல்லதை பண்றேள். பொது ஜனங்களுக்கு நல்லது பண்றேள், உங்களுக்கு ஒரு நல்லது கிடைக்கிறது. நல்ல ரிஷி பரம்பரையில் வந்தவா, இதைக் காப்பாற்ற வேணும், அத்யயனம் பண்றோம். மூலம் படிக்கிறோம். பிரம்ம யக்னம் பண்ணி பாராயணம் பண்றேள். அந்த யக்ஞுத்தில் ஒன்று, பிரம்ம யக்ஞம். எந்த சாகயை பாராயணம் பண்ணுகிறாளோ, அது பிரம்ம யக்ஞம். அப்படிப்பட்ட புண்ணியம் உங்களுக்கு கிடைக்கிறது. இந்த மந்திரங்களில் என்ன பிரயோகம் சொல்லி இருக்காளோ, அதை மத்தவாளுக்கு பண்ணி வைப்பதின் மூலமாக-அப்த பூர்த்தி, நாம கர்மா, ஜாத கர்மா, அன்னப்ராஷனம், உபநயனம், விவாஹம்- இந்த மந்திரங்களினால் வர வேண்டிய பிரயோஜனத்தை, மத்தவாளுக்கு நீங்க பண்ணிக் கொடுக்கிறேள், அதனாலே, லோகத்துக்கு உபகாரமாக, சர்வீஸ்-எப்படி ஒரு ஆஸ்பத்திரி கட்டினா, ஜனங்களுக்கு சௌகரியம் கிடைக்கிறது.

பள்ளிக்கூடம் கட்டினா, ஜனங்களுக்கு சௌகரியம் கிடைக்கிறது. அந்தக் காலத்திலே குளம் வெட்டினா, ஜலம் கிடைத்தது, சௌகரியம் கிடைத்தது. இன்றைக்கு வாட்டர் tank கட்டினா, சௌகரியம் கிடைக்கிறது. இப்போ, ஜலம் ரூபாய் பத்துக்கு வாங்கினா தீர்த்தம் கிடைக்கிறது. தாகம் நிவர்த்தி ஆகிறது. நீங்கள் பிரார்த்தனை பண்றேள்-மழை பெய்யணும். ஜனங்கள் சுபிக்ஷமா இருக்கணும்- அப்படியெல்லாம் மந்திரங்கள் மூலமாக, ஜனங்களுக்கு வேண்டிய வசதிகளை தேவதைகளிடத்தில் பிரார்த்தனை பண்ணி, லோகத்திற்க்காக பிரார்த்தனையும், மந்திர பாராயணமும் பண்றதனாலே, நீங்கள் பிரார்த்தனை பண்றது, ஒரு முக்கியமான social சர்வீஸ்-சமுதாயச் சேவை. மனிதனாகப் பிறந்தவர்கள் தன்னுடைய சௌகரியத்திற்காக வேலை பார்க்கிறோம், வியாபாரம் பண்றோம், இது ஒன்று. தன்னுடைய சௌகரியம் மட்டும் இல்லாமல், மற்றவர்களின் சௌகரியத்திற்காக அவரவர்கள் பண்ண வேண்டிய சமுதாய சேவைகளிலே, மந்திரம் மூலமாக, மந்திர பூதம் ஜலம் திபே - இந்த மந்திரத்தின்

மூலமாக, இந்த மந்திரத்திற்கு எப்படி சக்தி கிடைக்கிறது. Tape recorder மாதிரி, வெறுமன சொன்னா கிடைக்கிறதில்லை. அந்த சிகை, யக்ஞோபவீதம், ஆகார நியமங்கள், அத்யயன கிரமங்கள், கால நியமங்கள்-காலையில் சொல்லவேண்டிய மந்திரங்களை காலையில் சொல்லணும், மத்தியானம் சொல்ல வேண்டிய மந்திரங்களை மத்தியானம் சொல்லணும், சாயந்திரம் சொல்ல வேண்டிய மந்திரங்களை சாயந்திரம் சொல்லணும்.

எந்த சந்தர்ப்பத்தில், எந்த விதமாக, எந்த மந்திரங்களை- எது உரக்கச் சொல்லாமோ அதை, உரக்கச் சொல்லணும். எது உரக்க இல்லாமல் சொல்லாமோ, எதை வேகமாக சொல்லணும், எதை நிதானமாக சொல்லணும், பாராயண கிரமத்திலே எப்படி சொல்லணும், பிறருக்கு சொல்லித் தரும் போது, எப்படி சொல்லித் தர வேணும், இப்படி இந்த வேதம் என்பது மகா வ்ருக்ஷம். நிறைய பலன் அதிலே கிடைக்கிறது. அந்த வேதத்தை அத்யயனம் பண்ணி, நீங்கள் மேன்மேலும், லோகத்திற்கு நல்ல விஷயம் பண்றதற்க்காக ஸ்மாதக என்று பெயர். ஒரு வித்தையை பூர்த்தி பண்றவா, அது மாதிரி, வெவ்வேறு நிலையிலே ஸ்நாதகோற்சவம், அந்த விதத்திலே நீங்கள் பரிட்சை கொடுத்து, இன்னைக்கி பிரமாணப் பத்திரம் எல்லாம் கொடுக்கப் போறா. அது ஆசாரியாளின் ஜெயந்தி அன்று கொடுக்கப் போறா. அதுதான் விசேஷம். எந்த ஆச்சாரியாள், **வேதோ நித்தியம் அதீயதாம்** என்று சொன்னாரோ, அந்த ஆசாரியளுடைய ஜெயந்தி அன்று, உங்களுக்கு எல்லாம் பிரமாணப் பத்திரம் கிடைத்து, மேன்மேலும் நீங்கள் நல்ல விஷயம் பண்றதிற்கு குடும்பத்திற்கும் சரி, லோகத்திற்கும் சரி, உங்களுக்கும் சரி, நல்ல விஷயம் பண்றதிற்காக, வேற வேற ஊரிலிருந்து, வேற வேற பாஷை, வேற இடத்திலிருந்து வந்திருக்கேள். ஆனாலும், இந்த வேத வித்தையை, பாரத தேசம் முழுவதும், ஸ்வரம் படி, சந்திகள் சொல்லி, ஒரே விதமான உச்சாரணம், வெவ்வேறு மாநிலத்திலும் ஒரே உச்சாரணம், பாட பேதம் ஒன்றும் இல்லை. அப்படிப்பட்ட வேதத்தை, பரம்பரையாக, இந்த விஸ்வாசத்தோட, காப்பத்திண்டு வரக்கூடிய இந்த வித்தையை, படிக்ககூடிய சந்தர்ப்பம், சௌகரியம் எல்லாம் கிடைத்திருக்கு. இங்கே வந்தவா எல்லோரும், மேற்கொண்டு படிக்கப் போறேள். ஸ்ராத்தம், பிரயோகம் பண்ணி வைக்கிரவாளும் இருப்பேள். சமஸ்க்ருத பாஷையும் இந்த வேத பிரசாரத்தில் ஒரு முக்கியமான விஷயம். யாருக்கெல்லாம் சமஸ்க்ரிதம் படிக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் இருக்கோ, அவா எல்லாம், சமஸ்க்ருத காலேஜ், இங்கே மயிலாப்பூரில் இருக்கு. இன்னும் சில இடங்களில், சமஸ்க்ருத department எல்லாம் இருக்கு. வேதத்தோடு மேற்கொண்டு படிக்கணும் என்று நினைக்கிறவா , ரிக் வேதம் சம்ஹிதம் படித்திருக்கானா, பதம், க்ரமம் படிச்சுண்டு இருக்கலாம். யஜுர் வேதம் பூர்த்தி

பண்ணி இருக்கானா, மேற்கொண்டு படிக்க வேண்டிய ஜடம், கணம் படிக்கலாம். இதை முடித்தவா, சலக்ஷண கனபாடியாக, வ்யாகரணங்களும் படிக்கலாம். கணாந்தரம் முடித்து, வித்யாரண்யா பாஷ்யம், வேதத்தின் அர்த்தம் தெரிந்திருக்கணும் என்று ஆசை இருக்கிறவா, அவாளுக்கும் சரி, இல்லை சாஸ்திரங்கள் படிக்கணும், வியாகரணம் படிக்கணும், மீமாம்சம் படிக்கணும், வேதாந்தம் படிக்கணும், அப்படி நினைக்கிறவாளும் சரி, எல்லாருக்கும் பொதுவா தெரிந்து இருக்க வேண்டியது சமஸ்க்ரிதம். அந்த சமஸ்க்ருத பாஷை தெரிந்தால், நீங்கள் சொந்தமா புஸ்தங்களைப் பார்க்கலாம்.

வெவ்வேறு பாஷை பேசக் கூடிய பண்டிதா மத்தியிலே, பேசிக்கிறதும் சரி, புதுசா ஏதாவது research பண்ணனும் என்றாலும் சரி, பிரயோக புஸ்தகங்கள், மந்திர சாஸ்திர புத்தகங்கள் பாக்கணும் ஆனாலும் சரி, எல்லாத்துக்கும், உபயோகப்படக் கூடியது அந்த சமஸ்க்ருத பாஷை. எப்படி வேதத்தின் உச்சாரணம் முக்கியமோ, அதை வேதத்தின் உபதேசங்கள் நாம தெரிந்து கொள்ளவும் சரி, நமக்கு மனசிலே சந்தோஷமும், மனதிலே தெளிவு ஏற்படுவதற்காகவும் சரி, மற்றவாளுக்கு நல்லதை எடுத்து சொல்ல வேண்டுமானாலும் சரி, இந்த பாஷையை நாம தெரிஞ்சிண்டா சௌகரியமா இருக்கும். அந்த விதத்திலே, யாரெல்லாம் சமஸ்க்ரிதம் படிக்கணும் என்று நினைகிறாளோ, இவாகிட்ட பேரெல்லாம் கொடுத்தேள்னா, அவாளுக்கு எப்படி உற்சாகப் படுத்த முடியுமோ, லௌகீகமாகவும் சரி, அவாளுக்கு admission விதமாகவும் சரி, சாஸ்திரங்களிலும் சரி, all rounder -வேதத்தோடு சாஸ்திரங்களும் சேர்ந்து படிக்கக் கூடிய சௌகரியங்கள் இருந்ததுனா, self-எம்ப்லாய்மென்ட் என்று சொல்றா, சுயதொழில்-இப்போது தான் வேத பாராயணம் பண்றதக்காக 100 பேரை selection பண்ணப் போறா என்று சொன்னா திருப்பதியிலே. அது அப்பப்ப பண்றா. நீங்க அதோடு சேர்ந்து படித்தால், ஒன்று, தர்ம பிரசாரம் பண்றதக்கு சௌகரியமா இருக்கும். ஜனங்களுக்கு இருக்கக் கூடிய நம்பிக்கை நிறைய இருக்கு. எதிர்பார்ப்பு இருக்கு. வேதத்தில் எல்லாம் தெரிந்திருக்க வேணும். வேதம் படித்தவா எல்லோரையும் கௌரவிக்கணும், இன்னும் நிறைய இருக்க வேண்டும். இருக்கு, இப்படி எடுத்துச் சொல்லும் போது, நீங்கள் எடுத்துச் சொல்றது, அவாளுக்கு உதவியா இருக்கும். ஆகவே இந்த சந்தர்ப்பத்திலே, வேதம் படிச்சவா எல்லோரும், சாஸ்திரம் படிக்க எப்படி சௌகரியம் இருக்கோ, அதை இவா கிட்டச் சொல்லி, அதற்க்கான ஏற்பாடுகளை ஏற்படுத்திக்கலாம்.

(தொடரும்)

# முகாம் நிகழ்ச்சிகள்

*முகாம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சி*



**ஜூன்** 23 - ஸ்ரீ மடம் முகாம் நாக்பூரிலிருந்து புறப்பட்டு ராம்டெக் என்னுமிடத்தில் உள்ள கவி குல்குரு தொழில்நுட்ப கல்லூரி நிறுவன இடத்திற்கு வந்து சேர்ந்தது. இவ்விடத்தில் நடைபெற்ற சுக்ரவார விசேஷ பூஜையின் போது திருமண வயதில் உள்ள ஆண் / பெண் குழந்தைகளுக்கான சுயம்வரகலா பார்வதி ஸ்லோக படனம் செய்வித்து ஆசிர்வதிக்கப்பட்டார்கள்.

**ஜூன்** 25 - இன்று லோக க்ஷேமத்திற்காக பூரம் நக்ஷத்ரமும், ஞாயிறு சப்தமி திதியுடன் உள்ளதால் வியதிபாத யோக சௌர பாராயணம் நடத்தப்பட்டது. இது எதிர் வரும் நாட்களில் வெற்றிகரமாக நடைபெறக் கூடிய தருணமாக சூரிய க்ரஹணத்திற்கு ஈடானதுமானது. ஆகையால் விசேஷ ஸ்நானம், ஜபம், ஹோமம், தானம் ஆகியவைகள் செய்வதற்கு உகந்ததாக கருதப்படுவதாகும்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்யர்கள் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜைகள் முடித்து பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கிய பின்னர், முகாம் ராம்டெக் இடத்திலிருந்து புறப்பட்டு ஜபல்பூருக்கு மாலை வந்து சேர்ந்தது.

**ஜூன்** 27 - கடந்த இரு நாட்களாக ஜபல்பூர் பாலாஜி கோவிலில் நடைபெற்ற ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜையில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் ஸ்ரீ ஆசார்யர்கள் தரிசனம் தந்து அனுக்ரஹமும் வழங்கி அருளினார்கள். மேலும் நர்மதை நதிக்கரையில் கௌரிகாட் என்னுமிடத்தில் பாகவத கதை சம்மேளத்தில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்தருளினார்கள். தொடர்ந்து முகாம் மத்யபிரதேசத்திலுள்ள ரேவா என்னுமிடத்திற்கு நகர்ந்தது.

**ஜூன்** 28 – ரேவா என்னுமிடத்தில் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜை முடித்து முகாம் இரவு ப்ரயாக்ராஜ் புறப்பட்டது. வழி எங்கும் ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் ஸ்ரீ சித்தேஸ்வர் மகாதேவ் மந்திருக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள். அங்கு சுவாமிகள் ஈஸ்வரருக்கு பூஜைகளும் ஹாரத்தியும் செய்தார்கள். பின்னர் ஸ்ரீஸ்ரீ ஆசார்யர்கள் திருவேணி சங்கமத்தில் உள்ள ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆதிசங்கர விமான மண்டபத்திற்கு எழுந்தருளினார்கள். பண்டைய முறைப்படி தனுஷ்கோடியிலிருந்து எடுத்து வந்த பிரதிஷ்ட சைகத பரமேஸ்வர லிங்கத்தினை கங்கையில் தசாஸ்வமேத காட் பகுதியில் நிறைவு செய்தார்கள்.

வ்யாஸாசாலிய சங்கர விஜயத்தில் சங்கர பகவத்பாதாள் பிராயாகையில் தன் தாயை நினைவு கூர்ந்து தமது சிஷ்யர்களுடன் பல இடையூறுகளுக்கு இடையே ஸ்நானம் செய்ததாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

सस्नौ प्रयागे सह शिष्यसंघैः स्वयं कृतार्थो जनसंग्रहार्थी ।
अस्मारि मातापि च या पुपोष दयारसा दु:खमसोढ भूरि ।।

இதே பிரயாகையில் தேஷஸ்வ மேத காட் இடத்தில் ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் 1934ல் தனது காசியாத்திரையின் போதும் தொடர்ந்து 1974ல் ஸ்ரீஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளும் தனது காசி யாத்திரையின் போதும் பாதயாத்திரை (நடந்தே) சென்று பூஜை செய்தார்கள்.

ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் யாத்திரை 16.3.22ல் தொடங்கி கடந்த 28 மாதங்களாக ஆந்திர மாநிலம், தெலுங்கானா, கர்நாடகா மாநிலங்களை கடந்து பிரயாகை செல்லும் வழியில் நாக்பூர், ராம்டெக், ஜபல்பூர், ரேவா இடங்களுக்கும் சென்று இறுதியில் பிரயாகை 28-06-23ல் வந்து சேர்ந்தது.

பிரயாகையில் பாரம்பரிய முறைப்படி ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் தனுஷ்கோடியிலிருந்து எடுக்கப்பட்ட சிகத புனித மண் பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டு உள்ளூர் பண்டிதர்களால் பூஜைகள் செய்விக்கப்பட்ட பின்னர் கங்கை நதியில் நீராடி சைகத பரமேஸ்வர லிங்கமாக உருவகப்படுத்தப்பட்டு பூஜைகள் முடிந்த பின்னர் கங்கா தீர்த்தத்தில் கரைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் கங்கையில் நீராடி கங்கா ஜலம் ராமேஸ்வரத்தில அபிஷேகம் செய்ய சேகரிக்கப்பட்டது.

பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் யாத்திரையை முன்னிட்டு சடங்குகளை அனுஷ்டித்தார்கள். இத்தருணத்தில் வானில் மழைச்சாரலும், கருட தரிசனமும் சம்பவிக்கப்பட்டதை கூடியிருந்த பக்தர்கள் கண்டு பக்தி பரவசமானார்கள்.

கடந்த 2021ல் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ராமேஸ்வர யாத்திரையின் போது தனுஷ்கோடியிலிருந்து சிகதா ரதசப்தமி தினத்தில் எடுத்து வந்து சேது மாதவ சந்நிதியில் வைத்து பூஜை செய்யப்பட்டது. தொடர்ந்து ராமேஸ்வரம் சங்கர மடத்தில் கங்கா தீர்த்தம் 11 வெள்ளிக் கலசங்களில் நிரப்பி மூன்று நாட்கள் மஹாருத்ர ஜபம் செய்யப்பட்டு பின்னர் ஊர்வலமாக கோவில் மூலஸ்தானத்திற்கு கொண்டு வரப்பட்டு அபிஷேகம் ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் செய்விக்கப்பட்டதை இத்தருணத்தில் நினைவு கூறப்படுகிறது.

**ஜுலை** 1 - பிரயாக்ராஜ் கங்கை நதிக்கரையில் அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ள ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்கு சொந்தமான ஆதி சங்கர விமான மண்டபத்தில் பூஜ்ய ஸ்ரீ ஆசாரியர்கள் பக்தர்களுக்கு காலையில் தரிசனம் தந்தருளினார்கள். நித்ய பூஜைகளை தொடர்ந்து மாலை விசேஷ பிரதோஷ பூஜையும் நடைபெற்றது.

**ஜுலை** 2 - பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் திரிவேணி சங்கம பகுதியில் அமைக்கப்பெற்ற விசேஷ பந்தலில் வியாஸ பூஜையை காலை 10.30 மணிக்கு துவங்கி மாலை 4.00 மணியளவில் நிறைவு செய்தார்கள். தொடந்து பக்தர்களுக்கு வ்யாஸாக்ஷதை வழங்கி அனுக்ரஹித்த பின்னர் ஆதிசங்கரர் விமான மண்டபத்திற்கு புறப்பட்டார்கள். தீர்த்த க்ஷேத்திரத்தில் வெகு விமரிசையாக பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் நடத்தப்பட்ட வியாஸ பூஜையை தரிசித்த பக்தர்களுக்கு கிடைத்த அரியதொரு வரப்பிரசாதமாகும். இந்நிகழ்வு உலகெங்கும் உள்ள பக்தர்கள் கண்டு தரிசிக்கும் வண்ணம் காணொளி காட்சியாக ஒளிபரப்பப்பட்டது.

**ஜுலை** 5 - இன்று மூன்று கால ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜை முடிந்த பின்னர் பூஜ்ய ஸ்ரீ ஆசார்யர்கள் திரிவேணி சங்கமத்தில் சங்கல்ப ஸ்நானம் செய்தார்கள். மாலை ஸ்ரீ மடம் முகாம் பிரயாக் ராஜிலிருந்து காசி க்ஷேத்திரத்திற்கு புறப்பட்டது.

05-07-23 மாலை காசிக்கு வருகை தந்த ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளை ராமன் விலாஸ் என்னுமிடத்தில் காசி வாழ் மக்களால் காசி நகர மேயர் தலைமையில் வரவேற்கப்பட்டார்கள். ராமன் விலாஸ் என்னுமிடத்தில் 1974ல் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர

சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளுக்கும் வரவேற்பளிக்கப்பட்டது. பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் இரவு 7.00 மணியளவில் துவங்கி ஊர்வலமாக பிரதான சாலைகளில் வழியே அழைத்து வரப்பட்டு 5 மணி நேரங்கள் கடந்த நிலையில் காசிராஜா ராஜதானியில் ராஜா மற்றும் யுவராஜாவினரால் பாத பூஜைகள் நடத்தி வைக்கப்பட்டது. வழியெங்கும் கூடியிருந்த பல்வேறுபட்ட மக்களாலும், நிறுவனங்களை சார்ந்தவர்களாலும் உற்சாக வரவேற்பு பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளுக்கு அளிக்கப்பட்டது.

**ஜூலை** 6 - இன்று காலை பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் காசி விஸ்வநாத சுவாமி கோவிலுக்கு வருகை தந்தபோது கோவில் பண்டிதர்கள் மற்றும் தர்மகர்தாக்களால் வரவேற்க்கப்பட்டு கர்ப்பக்ரஹத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் காசி விஸ்வநாதருக்கு பூஜைகள் செய்வித்து பட்டு வஸ்திரங்கள், ரஜத வில்வம், தங்க புஷ்பங்கள், வெள்ளி பிடியுடன் கூடிய சாமரமும் சமர்ப்பித்தார்கள். தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் முக்த மண்டபத்திற்கு எழுந்தருளிய பின்னர் ஹனுமான் காட்டிலுள்ள ஸ்ரீ மடத்திற்கு திரும்பினார்கள்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் காசி வந்து சேர்ந்து 5ம் தேதியும், 6ம் தேதியும் ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கும், ஸ்ரீ கால பைரவர் ஆலயத்திற்கும் விஜயம் செய்தார்கள். 7ம் தேதி வெள்ளிக்கிழமை பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் சாதுர்மாஸ்ய சங்கல்பம் மேற்கொண்டார்கள். தொடர்ந்து சாதுர்மாஸ்ய மூன்று மாத காலத்தில் பல்வேறு சதஸ்கள், வேத பாராயணங்கள், சபாக்கள், ஹோமங்கள், பாகவத ஸப்தாஹம், சங்கீத கச்சேரிகள் ஆகிய பல்வேறு நிகழ்வுகள் வரிசையாக நடக்க உள்ளன.

**ஜூலை** 14 - கடந்த நாள் மாலையில் கங்கை நதிக்கரையில் கூடியிருந்த பக்தர்களுக்கு பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் தரிசனம் தந்தருளினார்கள். பின்னர் காஞ்சி காமகோடி மடத்தின் அருகாமையில் நடைபெற்ற தினசரி நிகழ்ச்சிகளில் ஹிந்துஸ்தானி சங்கீத கச்சேரி நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள்.

**ஜூலை** 15 - பக்தர் ஒருவரால் அழகிய பட்டு வஸ்திரத்தில் விஸ்வநாதாஷ்டகம், அன்னபூர்ணாஷ்டகம், கால பைரவாஷ்டகம் ஆகியவற்றை கையால் எழுதப்பட்டதை காசி ஸ்ரீ மடம் முகாமிற்கு பூஜ்ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் வழங்கப்பட்டது.

# பக்த மீராவின் க்ருஷ்ண கீதங்கள்

ராகம் பஹாடீ



**மத் ஜா மத் ஜா என்னும் பாடல்**
**போகாதே போகாதே என் ப்ரியமானவனே**
**உன் அடிமை உன் காலடியில்**
**கதறுகிறாள்.கண்ணீரும் கம்பலையுமாய்**
**போகாதே !**
**என் பக்திக்காக அன்புக்காக சற்று நில் க்ருஷ்ண !**
**அகருவினாலும் சந்தனதாலும் சிதை**
**செய்கிறேன்.**
**அதை நீயே பற்றவை அதன் பின் போ.**
**நான் சாம்பலாய் ஆன பின் அதை உன்னுடலில்**
**பூசு, போ.**
**மீராவின் கிரிதரனே ! என் ஜோதியை உன் ஜோதியுடன் சேர்,**
**அதன் பின் செல்.**
**மேரா மன் ஹரி என்னும் பாடல்**

*என் மனம் ஹரியையே சுற்றி சுற்றி வரும். அவன் துக்கம் அழிப்பவன். அவனைத் தவிர வேறு எதுவும் வேண்டேன். என் காதல் நித்யமானது சாஸ்வதமானது. நான் முனிகளைக் காணச் சென்ற போது ராணா என்னைக் கொல்ல முயன்றான். விஷம் தந்தான் . அது வெறும் ஜலம் ஆயிற்று.*

*ப்ரபுவை நம்பி அதைக் குடித்தேன். அவன் சரணோதகமாய் அதைக் குடித்தேன். போலிப் பகட்டுகளை நீக்கி அடக்கமும் நீக்கி காதலுடன் நர்த்தனம் செய்தேன். உண்மையில் அங்குசத்தால் அடக்கப்பட்ட யானையானேன். ராணா உலகத்தையே எனக்கெதிராய் திருப்பினான். இந்த மீரா உன்னில் தஞ்சமடைய இந்த ராணா என்ன செய்ய முடியும்? கிரிதரா! சொல்.*

## தே தோ பாலக என்னும் பாடல்

**ஹே ! ஆர்த்திஹர ! எனக்குக் கடாக்ஷம் கொடு.**
**இதோ மூலையில் நான் வெகு நாளாய் காத்திருக்கிறேன்.**
**என் நண்பர்கள் பகைவர்களாயினர்.**
**உன்னைத்தவிர எனக்கு யார் துணை ?**
**என் படகு சுழலில் தவிக்கிறது.**
**அமைதியற்ற வாழ்க்கை. தூக்கமில்லா இரவுகள்.**
**துக்கார்த்தனாய் நிற்கிறேன்.விரஹ பாணம் என் இதயத்தைத் துளைத்து விட்டது.**
**கால் வண்ணம் காட்டி அகலிகையைக் காத்தாய்.**
**இந்த மீரா உனக்கு பாரமோ?**
**இவள் மீது எப்போது உன் கால் வண்ணம் காட்டுவாய்? சொல்.**

### வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431
**IFSC Code :** ICIC 0006026
**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs
**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005
**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616
**Indian Bank** Mutt Branch, Kancheepuram
A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக்க் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> phone : 24740549

# ராஜதரங்கிணி 6

பி. ஆர். கண்ணன்

இந்த தரங்க ஆரம்பத்திலுள்ள சிவ-அர்த்தநாரீஸ்வரரைப் ப்ரார்த்திக்கும் ஶ்லோகம்:

**விஹிதமஜகோஶ்ருங்காப்யாம் தநுர்கடிதம் ததா**
**நரகரடிநோர்தேஹார்தாப்யாம் கணம் ப்ரதிக்ருஹ்ணத : ।**
**த்விவிதகடநாவால்லப்யாநாம் நிதேருசிதா விபோர்ஜயதி**
**லடபாபும்பாகாப்யாம் ஶரீரவிநிர்மிதி: ।। 1 ।।**

'ஆடு, மற்றும் காளையின் கொம்புகளிலிருந்து செய்யப்பட்ட வில்லையும், மனிதன், யானை ஆகியோரின் சரீரப்பாதிகளையுடைய கணபதியையும் உடன் வைத்திருக்கும் சிவன் பல வடிவங்களையும் விரும்புபவராக இருந்து கொண்டு, தானே ஆண்பாதி, பெண்பாதியான அர்த்தநாரீஸ்வரராகப் ப்ரகாசிக்கிறார்.'

**ராஜா துஞ்ஜீனர்**

கி.மு. 105 ல் காஷ்மீரை ஆண்ட இந்த ராஜாவையும், ராணியையும் கல்ஹணர் வெகுவாகப் புகழ்கிறார்.

**தம்பதிப்யாமியம் தாப்யாமபூஷ்யத வஸுந்தரா ।**
**கங்காம்ருகாங்ககண்டாப்யாம் ஜடாபூரிவ தூர்ஜடே: ।। 12 ।।**

'சிவனுடைய ஜடா முடியானது கங்கை, பிறைச்சந்த்ரன் இருவராலும் அலங்கரிக்கப்பட்டிருப்பது போலவே, இந்த பூமிக்கு இந்த ராஜ தம்பதிகள் அணிகலனாக இருந்தனர்.' ஒரு அதிசயத்தையும் கவிஞர் கூறுகிறார். மடவராஜ்யத்தின் உட்பகுதியில், தாங்கமுடியாத உஷ்ணம் தாக்கும் ப்ரதேசத்தில், மரங்கள் நட்டவுடனேயே, பழங்களை அளித்தன. துங்கேஶ்வரர் ஆலயம், காடிகா என்ற நகரம் ஆகியவற்றை ராஜா நிறுவினார். சிறந்த கவிஞர்களையும், கல்விமான்களையும் ஆதரித்த ராஜாவின் ராஜ்யத்தில், ஸாக்ஷாத் வேத வ்யாஸரின் அவதாரமாகக் கருதப்பட்ட சந்தகர் என்ற கவிஶ்ரேஷ்டர் விளங்கினார்.

ஒரு சமயம் பயங்கரமான பஞ்சம் நாட்டில் நிலவியபோது, குடும்பத்தினர்களே தங்களுள் உணவிற்காக சண்டையிடுமளவிற்கு நிலைமை மோசமாயிற்று. ராஜாவும், ராணியும் எப்படியோ எல்லோருக்கும் உணவிற்கு ஏற்பாடு செய்தனர். தங்கள்

அரண்மனையிலேயே சிலருக்கு தங்குவதற்கும் ஏற்பாடாயிற்று. பஞ்சத்தின் கடுமை நீண்ட காலமாகியும் குறையாததால், ராஜா தன் உயிரையே மாய்த்துக் கொள்ள விரும்பினார். ராணி எவ்வாறோ ஸமாதானப்படுத்திக் கூறினாள்:

**பத்யௌ பக்திவ்ரதம் ஸ்த்ரீணாமத்ரோஹோ மந்த்ரிணாம் வ்ரதம் ।**

**ப்ரஜாநுபாலநேநந்யகர்மதா பூப்ருதாம் வ்ரதம் ॥ 48 ॥**

‘கணவரிடம் பக்தியென்பது பெண்களின் வ்ரதம்; மந்த்ரிகளுக்கு ராஜவிஶ்வாஸமே வ்ரதம்; ராஜாவிற்கு ப்ரஜைகளை எவ்வாறாகிலும் காத்தலில் முழுமூச்சுடன் செயல்படுவதே வ்ரதம்‘ என்று. ராணியின் குணவிசேஷத்தினால் ராஜா தைர்யமடைந்து, செயலாற்றவே, பஞ்சமும் சிலகாலத்தில் தீர்ந்தது. பின்னர், ராஜாவின் காலம் முடிவுற்றபோது, ராணியும் உடன்கட்டை ஏறினாள். அவர்களுக்கு புத்ரபாக்யம் இல்லாததை, கல்ஹணர் குறிப்பிடுகையில், அவர்களுக்கு சமமான குணவானான புத்ரனைக் கொடுக்க இயலாமையினால் தேவர்கள் வருந்தினர் என்கிறார்.

பின்னர் வந்த ராஜா விஜயர், விஜயேஶ்வரர் ஆலயத்தையும், ஒரு நகரத்தையும் நிறுவினார்.

**ராஜா ஜயேந்த்ரர்**

விஜயரின் புத்ரர் ஜயேந்த்ரர் மிகவும் தீய ராஜாவாகத் திகழ்ந்தார். அவரிடம் ஸந்திமதர் என்ற ஒரு மந்த்ரி, சிவபக்தராகவும், பண்பாளராகவும் இருந்தார். கேடுகெட்ட ஆலோசகர்களின் அறிவுரையினைக் கேட்டு, ராஜா ஸந்திமதரைக் கழுவிலேற்றினார். ஆனால் விதி வேறுவிதமாக நிச்சயித்திருந்ததை கல்ஹணர் சொல்கிறார் :

**தக்தாங்காரகதம்பகே விலுடத: ஸ்தோகோந்மிஷத்தேஜஸோ வேதா**

**வஹ்நிகணஸ்ய ஶக்திமதுலாமாதாதுகாமோ ஹடாத் ।**

**தந்நிர்வாபணமிச்சத : ப்ரதநுதே பும்ஸ : ஸமீபஸ்திதே :**

**ஸந்தாபத்ருதபூரிஸர்பிஷி கடே பாநீயகும்பப்ரமம் ॥ 78 ॥**

‘ஒரு சிறு தீப்பொறி, எரிந்துபோன விறகுக்கட்டையில் ஒளிரும்போது, ப்ரம்மா அத்தீப்பொறிக்கு பெரும் சக்தியை வழங்கிடத் தீர்மானிக்கையில், அவர் அத்தீயை அணைக்க முற்படுவனுக்கு, அருகில் உள்ள சூட்டினால் உருகிய நெய் உள்ள பாத்திரத்தை, ஜல பாத்திரமாக எண்ணி, அத்தீயில் கொட்டும்படி செய்கிறார்‘ என்று. ஸந்திமதரின் குரு ஈஶானர் என்பவர் அவரிடம் மிக்க பற்று கொண்டவர். அவர் ஶ்மஶானம் சென்று, ஸந்திமதரின் எலும்புக் கூட்டினைக் கண்டார். ஸந்திமதியின்

நெற்றியில், அவர் கழுவில் இறந்தபிறகும் ராஜாவாக ஆவார் என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தார். அவர் அங்கேயே எலும்புக் கூட்டினை விட்டுவிட்டு, ஶ்மஶானத்திலேயே இரவைக் கழித்தார். அவர் கண்களுக்கெதிரிலேயே நம்பவே முடியாத பேராச்சர்யம் அவ்விரவினில் நிகழ்ந்தது. யோகினிதேவதைகள் அங்கு வந்து, புதிய அங்கங்களைக் கொண்டுவந்து, எலும்புக்கூட்டுடன் பிணைத்து, மனித உருவம் தந்து, உயிரையும் ஊட்டினர். தூக்கத்திலிருந்து எழுபவரைப் போல ஸந்திமதர் எழுந்தார். பின்னர் அவர் ராஜாவானார்.

**ராஜா ஸந்திமதர்/ ஆர்யராஜா**

சிறந்த சிவபக்தராக விளங்கிய ஸந்திமதர் வெகு மதிப்புடன் ஆர்யராஜா என்றும் அழைக்கப்பட்டார். ஒரு ரிஷியைப் போல இருந்த அவர் ராஜ்யத்தில், இயற்கைச் சீற்றமோ, மனிதர்களின் தவறுகளால் உண்டாகும் அபாயமோ இல்லவே இல்லை. பூதேஶ்வரர், வர்த்தமானேஶ்வரர், விஜயேஶ்வரர் ஆலயங்களுக்கு அடிக்கடி சென்று விரிவான பூஜைகள் செய்தார். அவருடைய ஸபை, விபூதி, ருத்ராக்ஷம், ஜடாமுடி தரித்த தபஸ்விகளினால் நிறைந்திருந்ததைப் பார்த்தால், கைலாஸத்தில் சிவனுடைய ஸபையை நினைவுபடுத்தியது. தினந்தோறும் 1000 சிவலிங்கங்களை மண்ணினால் செய்து, பூஜித்து, நீரில் விஸர்ஜனம் செய்யும் வ்ரதத்தை விடாமல் பின்பற்றினார். நாட்டில் பெரிய சிவலிங்கங்கள், பெரிய நந்திமூர்த்திகள், பெரிய த்ரிசூலங்கள் என்று நிறுவி சிவலோகமாக்கினார். ஸந்தீஶ்வரர், ஈஶானேஶ்வரர் ஆலயங்களையும் புதிதாக நிர்மாணித்தார். காலப்போக்கில் சிவத்யானத்திலும், காடுகளுக்குச் சென்று தபஸ்விகளுடன் உரையாடுவதிலும் மிக்க ஈடுபாடு கொண்டார் ராஜா. ராஜாங்க நிர்வாகத்தில் அவர் மனம் செல்லவில்லை. கடைசியில் நாட்டைவிட்டு, ராஜா வடதிசை நோக்கி நடந்து சென்று மறைந்தார்.

ஜனங்கள் காந்தார தேசத்திலிருந்த, யுதிஷ்டிரர் வம்சத்தைச் சேர்ந்த ராஜகுமாரனை ராஜாவாக்க தீர்மானித்தனர். அந்த ராஜகுமாரனிடம் ஒரு விசேஷத்தைக் கண்டனர் மக்கள். அவன் ப்ராக்ஜ்யோதிஷபுரத்திற்குச் சென்று, ஸ்வயம்வரத்தில் ராஜகன்னிகையை மணந்தான். அப்போது, அங்கு இருந்த குடை, நரகராஜா (நரகாஸுரன்) வருணனிடமிருந்து கைப்பற்றிய குடை, தானாகவே வந்து இந்த ராஜகுமாரனுக்கு நிழலூட்டியது. இது பெரும் சுபசகுனமாகப்பட்டது காஷ்மீர மக்களுக்கு.

(தொடரும்)

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 10

## ஸ்ரீ கோவிந்த பகவத்பாதர்

ஸ்ரீ கோவிந்த பகவத்பாதர் ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதரின் குரு. 'சந்த்ர சர்மா என்பது இவரது பூர்வாச்ரம திருநாமம். இவரைப் பற்றிய பல ஆச்சரியமான வரலாறுகள் காணப்படுகின்றன. சிதம்பரத்தில் பதஞ்ஜலி முனிவரிடம் மஹாபாஷ்யம் கற்ற கௌடபாதாசாரியரின் சீடர். இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கும் பதஞ்ஜலி முனிவரின் மஹாபாஷ்யம் இவராலேயே வெளிக் கொண்டு வரப்பட்டது. 'பதஞ்ஜலி விஜயம் என்ற தனது அற்புதமான நூலில் ஸ்ரீ ராமபத்ர தீக்ஷிதரவர்கள் ஸ்ரீ கோவிந்த பகவத்பாதரின் பூர்வாச்ரம வரலாற்றை அழகுறக் கூறியுள்ளார். இவ்வரலாற்றைப் பூர்த்தி செய்யுமிடத்தில் சுருக்கமாக முடிவுரை போல் சொல்கிறார்.

**கோ³விந்த³ தே³சிகமுபாஸ்ய சிராய ப⁴க்த்யா ।**
**தஸ்மின் ஸ்தி²தே நிஜமஹிம்நி விதே²ஹமுக்த்யா ॥**
**அத்³வைத பா⁴ஷ்ய முபகல்ப்ய திசோ விஜித்ய**
**காஞ்சீபுரே ஸ்தி²திமவாப ச சங்கரார்ய : ॥**

நீராடும் சமயம் முதலை காலைப் பிடித்தது என்பதைக் காரணமாகக் கொண்டு துறவறம் மேற்கொண்டு, தாயைத் தேற்றி விட்டு நர்மதை நதிக்கரையை அடைந்து, ஸ்ரீ கோவிந்த பகவத்பாதரிடம் சீடராக அமர்ந்தார் ஸ்ரீ சங்கரர். நெடுங்காலம் குருவுடனிருந்து பணிவிடை செய்து வந்தார். ஜீவன் முக்தரான ஸ்ரீ கோவிந்த பகவத்பாதர் விதேஹ முக்தியடையும் வரையில் உடனிருந்தார். பிறகு திக்விஜயம் புறப்பட்டார்.

குருவின் கட்டளையைச் சிரமேற் கொண்டு உபநிஷத்துகள், வேதாந்த ஸூத்ரங்கள், ஸ்ரீமத் பகவத்கீதை இவற்றிற்கு அவற்றின் உண்மைப் பொருளான அத்வைத தத்துவங்களை விளக்கும் வகையில் பாஷ்யங்களைத் திறம்பட இயற்றினார். அத்வைத ஸித்தாந்தமே வேத ஸம்மதமானது, வியாஸ ஸம்மதமானது என்பதை நிறுவி எல்லா திசைகளிலுமிருந்த மாற்று ஸித்தாந்தக்காரர்களை வாதத்தில் வென்றார். பிறகு அவதார காலம் முடியும் வரையில் காஞ்சியில் வசித்தார்.'

யோக தாராவளி, அத்வைதானுபூதி, அவதூத கீதை போன்ற நூல்கள் ஸ்ரீ சங்கரர் இயற்றியதாகக் காணப்பட்டாலும், ஸ்ரீ கோவிந்த பகவத்பாதரே இவற்றை இயற்றினார் என்று அறியப்படுகிறது. 'விவேக சூடாமணி'யின் முதல் சுலோகத்தில் ஸ்ரீ சங்கரர்

'கோவிந்தம் பரமானந்தம் மத்குரும் ப்ரணதோஸ்ம்யஹம்' என்று தனது குருவைத் துதிக்கிறார். 'ஆத்ம போத'த்திற்கு இவர் ஒரு உரை எழுதியுள்ளதாக நம்பப்படுகிறது.

சிறந்த அறிவாளியாகத் தேர்ந்தெடுத்துத் தான் கற்ற மஹாபாஷ்யத்தை உபதேசித்து சாப விமோசனம் பெற வேண்டுமென்று நர்மதை நதிக்கரையில் ஒரு அரச மரத்தில் ப்ரஹ்ம ராக்ஷஸ வடிவில் அமர்ந்திருந்தார் கௌடபாதாசாரியர். வெகு காலம் காத்திருந்தார். ஒரு சமயம் காஷ்மீர தேசத்தைச் சேர்ந்த 'சந்த்ர சர்மா' என்ற ப்ரும்மச்சாரி சிதம்பரத்தில் பதஞ்ஜலி முனிவர் மஹாபாஷ்யம் பாடம் சொல்கிறார் என்று கேள்விப்பட்டுக் கால் நடையாக வந்து கொண்டிருந்தான். ஈஸ்வர ஸங்கல்பத்தால் கௌடபாதர் மறைந்திருந்த மரமுள்ள நர்மதா நதிக்கரையை அடைந்தான். வழக்கம்போல் 'சந்த்ர சர்மா'விடம் இலக்கணம் தொடர்பாகச் சில கேள்விகள் கேட்டார். இதுவரையில் யாரும் சரியாகப் பதில் சொல்லாதவற்றிற்கெல்லாம் மிகச் சரியாகப் பதில் சொல்வதைக் கேட்டு மகிழ்ந்தார். 'சிதம்பரத்தில் நடந்தவற்றைக் கூறினார். நான் ஒருவனே எஞ்சிய மாணவன். சாபத்தால் இந்நிலை அடைந்தேன். நீயே மஹாபாஷ்யத்தைப் பெறத் தகுந்த அதிகாரி.

ஆகையால் மரத்தில் மேல் ஏறி வருவாயாக. இங்கேயே அமர்ந்து பாடம் கற்கலாம். எத்துனை நாட்கள் ஆனாலும் பாடம் முடிக்காமல் மரத்தை விட்டு இறங்கக் கூடாது என்று நிபந்தனை விதித்தார். கற்பதில் உள்ள ஆர்வத்தால் மரத்தில் ஏறி அமர்ந்து கற்கத் துவங்கினார். குரு சொல்லச் சொல்ல மறக்காமலிருக்க அரச இலையைப் பறித்து அதன் காம்பையே எழுது கோலாகக் கொண்டு தன் தொடையைக் கிழித்து வந்த ரத்தத்தையே மையாகக் கொண்டு இலைகளில் எழுதினார். இவ்வாறு ஒன்பது தினங்கள் ஊண் உறக்கமின்றி இரவு பகலாகக் கண் துஞ்சாமல் கற்றார். எழுதினார். பாடம் முடிந்தது. கௌடபாதர் சாபநீக்கம் பெற்றார். இமயமலை சென்று சுக முனிவரைச் சரணடைந்தார். எழுதிய இலைகளை தனது மேல் வஸ்திரத்தில் மூட்டை கட்டினார். சந்த்ர சர்மா மரத்திலிருந்து இறங்கினார். ஞான மூட்டையுடன் வடதிசை நோக்கிப் பயணமானார்.

பதஞ்ஜலி முனிவர் கௌடபாதருக்குச் சாபம் கொடுத்த பின் தவத்தில் அமர்ந்தார். ஞான திருஷ்டியினால் தன் சீடன் கௌடபாதரிடம் யாரும் பாடம் கற்க வரவில்லை என்றறிந்தார். சீடனின் சாபம் நீங்கவும் மஹாபாஷ்யம் உலகில் பரவவும் என்ன வழி என யோசித்தார். தானே சந்த்ர சர்மா என்ற பெயரில் அவதரித்து, சீடனாக

வந்து, தனது சீடரைக் குருவாகக் கொண்டு கற்றார்.

ஞான மூட்டையுடன் புறப்பட்ட சந்த்ர சர்மா பல நாட்கள் ஊணும் உறக்கமுமின்றி கற்றதால் மிகுந்த களைப்புடன் மரத்தடியில் ஞான மூட்டையைத் தலையணையாகப் பாதுகாப்புடன் வைத்துக் கொண்டு உறங்கி விட்டார். அப்போது ஒரு ஆடு அந்தப்பக்கம் வந்தது. தலையின் கீழிருந்த மூட்டையின் இலைகள் ஈர்க்க ஆவலுடன் வந்து மூட்டையிலிருந்த இலைகளை இழுத்துத் திண்ண ஆரம்பித்தது. **'ச்ரேயாம்ஸி பஹூ விக்னாநி'** என்று நல்ல காரியங்களுக்குத்தான் எத்தனை இடையூறுகள்! நிறைய இலைகளைச் சாப்பிட்டு மூட்டையை இழுக்கும் போது விழித்துக் கொண்டார் சந்த்ர சர்மா. நடந்தது அறிந்து துடித்துப் போய்விட்டார். ஈஸ்வர ஸங்கல்பம் இப்படித்தான் போலும் என்று மனதைத் தேற்றிக் கொண்டு புறப்பட்டார். இனி தூங்காமல் விழிப்புடனிருக்க வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டார்.

இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் மஹாபாஷ்யம் ஆடு தின்றது போக மீதிதான். இதனால் இதற்கு 'அஜ பக்ஷித பாஷ்யம் என்று ஒரு பெயர் உண்டு. கால்நடையாக வந்து கொண்டிருந்த சந்த்ர சர்மா உஜ்ஜயனி நகரை அடைந்தார். பசி, தாகம், களைப்பு மேலிட வைச்ய வீதியிலுள்ள ஒரு வைச்யன் இல்லத்து வாயிற் திண்ணையில் தூக்கமா அல்லது மயக்கமா என்று உணர முடியாத நிலையில் சாய்ந்து படுத்து விட்டார். நாள் கணக்கில் இந்நிலையிலேயே கிடந்தார். அந்த இல்லத்துத் தலைவனான வைச்யனின் குமாரி வாலிபனான சந்த்ர சர்மாவின் நிலையைக் கண்டு இரக்கப்பட்டுத் தன் தந்தையிடம் இவரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள்.

அவரை வீட்டிற்குள் கொண்டு வந்து கிடத்தினர். மூட்டையையும் பாதுகாப்பாகத் தலைப் பக்கத்தில் வைத்தனர். தயிரையும் அன்னத்தையும் கலந்து கூழ்போல் மசித்து மயங்கிக் கிடந்த சந்த்ர சர்மாவின் உடலில் தேய்த்து சாரத்தை உள்ளிறக்கினர். வைச்யனின் பெண் பிரியத்துடன் இரவு பகலாகக் கண்விழித்துப் பணிவிடை செய்தாள். சில நாட்களில் பிரக்ஞை வந்து கண் திறந்தார். வைச்ய குடும்பத்தின் பராமரிப்பில் உடல் நலம் பெற்றுத் தேறினார். நடந்து செல்லும் அளவிற்கு பலம் பெற்றார். நடந்தவை பற்றி அறிந்தார், வைசிய குடும்பத்தினரின் பிரியம் கண்டு கண்கலங்கினார். நன்றி சொன்னார், எனது உயிரைக் காப்பாற்றிய உங்களுக்கு நான் கடமைப்பட்டவன் என்றார். புறப்பட ஆயத்தமானார். வைச்யனின் குமாரி கண்ணும் கண்ணீருமாகப் பிரிவு தாங்காமல் தவித்தாள், தந்தை நிலைமை உணர்ந்தார்.

'தங்களுக்கு உயிர் கொடுத்தவள் என் மகள். அவள் செய்த பணிவிடை மகத்தானது. தங்களைப் பிரிய மனமில்லாது தவிக்கிறாள். எனவே தாங்கள் இவளைத் திருமணம் செய்து கொண்டு தங்களுடன் அழைத்துச் சென்று விடுங்கள். தங்களைப் பிரிந்து இவள் உயிர் வாழ மாட்டாள்' என்று வேண்டினார். தனக்கு விவாஹ இச்சை கிடையாது என்று மன்றாடிப் பார்த்தார், தந்தை விடுவதாக இல்லை.

மன்னனிடம் சென்று முறையிட்டு நீதி கேட்கலாம் என்று முடிவு செய்து வைச்யன் சந்த்ர சர்மாவை அழைத்துக் கொண்டு ராஜசபை சென்றான். மன்னன் முன் விசாரணைக்கு வந்தது. சந்த்ர சர்மாவின் பிரம்ம தேஜஸைக் கண்டு மயங்கிப் போன மன்னன் தனது குமாரியை இவருக்கு மணம் முடிக்க விருப்பம் கொண்டான். வைச்யன் வழக்கைக் கேட்டான். தனக்கு ஆலோசகராகவும், மந்திரியாகவும் இருந்த அந்தணப் பண்டிதரை அழைத்து வரச் சொன்னான். மந்திரி வந்தார். சந்த்ர சர்மாவைக் கண்டதும் அவரது தேஜஸால் கவரப்பட்டு விவாஹ வயதிலிருந்த தனது மகளை எப்பாடு பட்டாகிலும் இவனுக்கு மணம் முடித்து விட வேண்டும் என்று தீர்மானித்தார். மன்னன் தன் நெஞ்சிலிருந்த விருப்பத்தைக் கூறினான். வைச்யன் வழக்கு பற்றியும் விவரித்தான். இதைக் கேட்ட மந்திரி தன் மனதில் எழுந்த ஆசை பற்றியும் எடுத்துரைத்தார். 'இதற்கு ஒரே தீர்வு மூன்று பெண்களையும் இவ்வாலிபனுக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்து விடலாம். இவ்வாறு செய்வது சாஸ்திர விரோதமுமாகாது', என்றார். அது சமயம் சந்த்ர சர்மாவுக்குப் பணிவிடைகள் செய்த காலத்தில் உடனிருந்து உதவி செய்த நான்காவது வர்ணத்தைச் சேர்ந்த பெண் தானும் இவரையே திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுவதாகக் கூறினாள். மன்னன் நான்கு பெண்களையும் இவ்வாலிபன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தான். நன்றாகச் சிக்கிக் கொண்டோமே என்று வருந்திய சந்த்ர சர்மா இதுவும் ஈஸ்வர ஸங்கல்பமே என்று மனதைத் தேற்றிக் கொண்டார். விவாஹத்திற்குச் சம்மதித்தார். நால்வரையும் திருமணம் செய்து கொண்டார்.

நால்வரிடமும் முறையே நான்கு குமாரர்கள் பிறந்தனர். அந்தணரான மந்திரியின் குமாரியிடம் பிறந்தவர் 'வரருசி'. இவர் மிகச்சிறந்த கவி. ராஜகுமாரியிடம் பிறந்தவர் 'விக்ரமாதித்தன்'. இவன் புகழ் பெற்ற மன்னனாக விளங்கினான். வைச்ய குமாரியிடம் பிறந்தவர் 'பட்டி'. இவர் விக்கிரமாதித்த மன்னனிடம் மந்திரியாக விளங்கியவர். இவரும் பெரிய கவி. நான்காவது வர்ணப் பெண்ணிடம் பிறந்தவர். 'பர்த்ருஹரி' இவரும் பெரிய

கவியாகவும் விளங்கினார். ஸம்ஸ்கிருத இலக்கணத்திற்கு 'வாக்ய பதியம்' என்ற அற்புத நூலை எழுதியவர்.

புதல்வர்கள் பிறந்தாயிற்று, மஹாபாஷ்யமும் பலர் மூலம் பிரச்சாரம் என செய்யப்பட்டாயிற்று; இனியும் சிறிது காலம் கூட இல்லறத்தில் இருக்கக் கூடாது என்று தீர்மானித்தார். 'கூறாமல் ஸந்யாஸம் கொள்' என்ற வாக்கிற் கிணங்கப் புறப்பட்டார். ஞான திருஷ்டியால் தனது குருநாதர் பத்ரிகாச்ரமத்தில் சுகாச்சார்யரிடம் துறவறம் பெற்று பிரம்ம நிஷ்டையில் இருப்பது அறிந்து இமயம் சென்றார். ஜீவன் முக்தராக குருவான சுகாச்சார்யர் போன்று ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்த கௌடபாதரைக் கண்டு அடிபணிந்தார். சீடனைக் கண்டு அகமகிழ்ந்தார் கௌடபாதர். நடந்த நிகழ்ச்சிகள் பற்றி அறிந்தார். ஈஸ்வர லீலையின் மஹத்துவத்தை யார் தான் அறிய முடியும் என்று வியந்தார். ஸந்யாஸம் கொடுத்தார். சந்த்ர சர்மாவும் 'ஸ்ரீ கோவிந்த பகவத்பாதர்' என்ற தீக்ஷா நாமம் பெற்றார். பிறகு குருவின் கட்டளைக்கு இணங்க தன் குருநாதர் தங்கியிருந்த நர்மதா நதி தீரம் வந்து சேர்ந்தார். ஒரு குகையில் தவத்திலிருந்தார், பரமேச்வரனின் அவதாரமாக வர இருக்கும் ஸ்ரீ சங்கரருக்காகக் காத்திருந்தார்.

**'ஹரிதல்ப ஹராங்கரி நூபுர க்ஷ்மாதர**
**ஸௌமித்ரி பலாத்ரிபுத்ர லக்ஷ்மா ।**
**ஜயதாத் உபரேவம் ஆத்ததா'மா ஜய**
**கோவிந்த முநி: ஸ சந்த்ரநாமா ॥**

பகவான் நாராயணருக்குப் படுக்கையாக இருப்பவரும், பரமேச்வரன் ஆனந்த நடனமாடும் காலத்தில் அவரது பாதச் சிலம்பாக இருப்பவரும், தனது ஆயிரம் தலைகளில் ஒன்றின் மேல் (சிறிய வெண்கடுகு போல்) பூமியைத் தாங்கிக் கொண்டிருப்பவரும், ஸௌமித்ரா மைந்தனாக லக்ஷ்மணனாக அவதரித்தவரும், அடுத்த அவதாரத்தில் பலராமராகத் தோன்றியவரும், தொடர்ந்து அத்ரிபுத்ரராகப் பதஞ்சலியாக அவதரித்தவரும், பூர்வாச்ரமத்தில் சந்த்ர சர்மா என்ற பெயருடையவரும், ரேவா எனப்படும் நர்மதா நதிதீரத்தில் வசிப்பவரும் இவ்வாறு பல வடிவங்களைத் தாங்குகின்றவருமான ஸ்ரீ கோவிந்த பகவத்பாதர் அவர்களின் பெயரும் புகழும் என்றும் நிலைத்திருக்கட்டும்.

# சாணக்ய ஸுபாஷிதம்

### மனிதன் வெற்றி பெறும் முறை

**தாக்ஷிண்யம் ஸ்வஜனே தயா பரிஜனே சாட்யம் ஸதா துர்ஜனே**
**ப்ரீதி: ஸாது ஜனே ஸ்மய கலஜனே வித்வஜ்ஜனே சார்ஜவம்**
**சௌர்யம் சத்ரு ஜனே க்ஷமா குரு ஜனே நாரீஜனே தூர்த்ததா**
**இத்தம் யே புருஷா: கலாஸு குஸலாஸ்தேஷ்வேவ லோகஸ்திதி: ॥**

*தன் மக்களிடத்தில் தாக்ஷிண்யத்துடனும், வேலையாள்களிடம் தயையுடனும் ஸாதுக்களிடத்தில் ப்ரீதியையும், துஷ்டர்களிடத்தில் ஒடுக்கமும், பண்டிதர்களிடத்தில் நேர்மையுடனும், சத்ருக்களிடத்தில் வீரத்துடனும், குருவினடத்தில் பொறுமையுடனும்,பெண்களிடத்தில் எச்சரிக்கையுடனும் எவன் ஒழுகுகிறானோ அவனே உலகுக்கு விளக்கம்.*

### பண்டிதன் யார்

**மாத்ருவத் பர தாரேஷு பரத்ரவ்யேஷு லோஷ்டவத்**
**ஆத்மவத் ஸர்வ பூதேஷு ய : பஸ்யதி ஸ பண்டித: ॥**

*அன்னிய பெண்களை அன்னை போன்றும், அன்னியன் பொருளை ஓட்டான் சில்லி போலும் தன்னைப் போல் எல்லாரையும் எவன் பார்க்கிறானோ அவனே பண்டிதன்.*

### கனியிருப்ப காய் கவர்ந்தற்று

**ந வேத்தி யோ யஸ்ய குணப்ரகர்ஷம் ஸ தம் ஸதா நிந்ததி நாத்ர சித்ரம்**
**யதா கிராதீ கரிகும்பலக்னாம் முக்தாம் பரித்யஜ்ய பிபர்தி குஞ்சாம் ॥**

*தன்னிடம் ஆதீனமானவனிடம் உள்ள குணம்கைமையை அறியார். அவனை நிந்திப்பர். யானையின் மத்தகத்தில் உள்ள முத்தை விட்டு கிராதீ மணியைப் பொறுக்குவாள் போலும்.*

### வளர்க்கும் உறவு

**தே புத்ரா: யே பிதுர் பக்தா: ஸ பிதா யஸ்து போஷக:**
**தன்மித்ரம் யத்ர விஸ்வாஸ; ஸா பார்யா யத்ர நிவ்ருதி: ॥**

*தந்தையிடம் பக்தியுள்ளவர்களே புத்ரர்கள், அவர்களை போஷிப்பவனே பிதா, நம்பிக்கையுடன் இருப்பவனே மித்ரன், எவளிடம் அமைதி வருமோ அவளே மனைவி.*

**இவர்களும் தந்தையரே**

**ஜனிதா சோபனேதா ச யஸ்து வித்யாம் ப்ரயச்சதி**
**அன்னதாதா பயஸ்த்ராதா பனஜிதே பிதர : ஸ்ம்ருதா: ॥**

*பிதா குரு கல்வி தருபவன், அன்னம் தருபவன், அச்சத்திலிருந்து காப்பவன் இந்த ஐவரும் தந்தையரே.*

**இவர்களும் தாய்மார்களே**

**ராஜ்பத்னீ குரோ பத்னீ மித்ரபத்னீ ததைவ ச**
**பத்னீ மாதா ஸ்வமாதா ச பன்ஜைதா மாதர: ஸ்ம்ருதா: ॥**

*அரசன், மனைவி, குருபத்னீ நண்பனின் பத்னீ பத்னியின் அன்னை தன்னுடைய அன்னை இந்த ஐவரும் தாய்மாமார்களே.*

**வளர்க்கும் விதம்**

**லாலயேத் பஞ்ச வர்ஷாணி தச வர்ஷாணி தாடயேத்**
**ப்ராப்தே து ஷோடஸே வர்ஷே புதம் மித்ரவதாசரேத் ॥**

*முதல் ஐந்து வருடம் கொஞ்சியும், அடுத்த பத்து வருடம் அடித்தும் பதினாறு வயது வந்தவுடன் நண்பனைப் போல் குழந்தைகளை வளர்க்கவும்.*

**நிலையாமை**

**த்யஜ துர்ஜன ஸம்ஸர்க்கம் பஜ ஸாது ஸமாகமனம்**
**குரு புண்யம் அஹோராத்ரம் ஸ்மர நித்யம் அனித்யதாம் ॥**

*கீழோரின் ஸேர்க்கையை விடு, ஸாது ஜனங்களுடன் சேர். தினம் முழுதும் புண்யம் செய் எல்லாம் அனித்யம் என்பதை நித்யம் உணர்.*

*(தொடரும்)*

# ஆவணி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 22-08-2023 | செவ்வாய் | ஸ்வாதி வேத பாராயணம் |
| 24-08-2023 | வியாழன் | அனுஷம் தேர் ; அனுஷம் வேத பாராயணம் |
| 25-08-2023 | வெள்ளி | வரலட்சுமி வ்ரதம் |
| 26-08-2023 | சனி | மூலம் தேர் ; மூலம் வேத பாராயணம் |
| 27-08-2023 | ஞாயிறு | ஏகாதசி |
| 28-08-2023 | திங்கள் | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம்<br>த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| 29-08-2023 | செவ்வாய் | ரிக் உபாகர்மா |
| 30-08-2023 | புதன் | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம்<br>பௌர்ணமி பூஜை ; யஜுர் உபாகர்மா |
| 31-08-2023 | வியாழன் | காயத்ரி ஜபம் |
| 06-09-2023 | புதன் | கோகுலாஷ்டமி |
| 10-09-2023 | ஞாயிறு | ஏகாதசி |
| 11-09-2023 | திங்கள் | த்வாதசி |
| 12-09-2023 | செவ்வாய் | ப்ரதோஷ பூஜை |
| 16-09-2023 | சனி | ஸாமவேத உபாகர்மா |

18-08-2023; 25-08-2023; 01-09-2023 08-09-2023; 15-09-2023

வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி
சமேத ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை

# பெரிய புராணமும் அத்வைதமும்

*(வே. நாராயணன், சென்னை)*

*சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் கடைசியாக அமைந்துள்ளது சேக்கிழார் பாடியருளிய பெரியபுராணம் என்று வழங்கும் திருத்தொண்டர் புராணம். சுந்தரமூர்த்தி நாயனார் தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று தொடங்கும் தேவாரத்திலே அறுபத்துமூன்று நாயன்மார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் சிறப்பித்துள்ளார். சுந்தரமூர்த்திகள் பிறந்த நாட்டின் சிறப்பையும் நகரச் சிறப்பையும் கூறி, சிவபிரான் அவரைத் தடுத்தாட் கொண்ட வரலாற்றையும் கூறியபின், சிவனடியார்களின் வாழ்க்கை நலங்களை விரித்துக் கூறுவது பெரியபுராணத்தின் கருத்து. இவ்வாறு வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் நூலிலே, சரியை கிரியை முதலிய மார்க்கங்களைத் தெளிவாகக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வாய்ப்பது போல தத்துவத்தைப் போதிப்பதற்கு அதிக இடம் இல்லை. ஆயினும் சேக்கிழாரும் சிறந்த அனுபவியாதலால் அவருடைய திருவாக்கிலும் ஆங்காங்கு அத்வைத உண்மைகள் மிளிர்கின்றன. அவற்றை இங்கு எடுத்துக் காட்டுவது பொருந்தும்.*

*கடவுளின் தன்மையைக் கூறுவதாக அமைந்துள்ளன தில்லைவாழ் அந்தணர் சருக்க'த்துள்ள தெய்வ வணக்கப் பாடல்கள் இரண்டும்,*

**ஆதியாய் நடுவும் ஆகி அளவிளா அளவும் ஆகிச்**
**சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்**
**பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்**
**போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.**
**கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி**
**அற்புதக் கோலபீடி அருமறைச் சிரத்தின் மேலாம்**

**சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று**
**பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.**

*இப்பாடல்களிலே, வேதாந்தத்தின் கற்பனைக்கும் எட்டாத நிர்க்குணப் பொருளே கருணமூர்த்தியான சகுணப் பிரும்மமாகித் தில்லையுள் நடனஞ் செய்கின்றது என்றும்,*

*அதுவே ஜகத்காரணவஸ்து என்றும், அது தோன்றிய பொருள் அனைத்தும் ஆகிய போதும் பேதப்படாத ஒன்றாக இருக்கின்றது என்றும் இவ்வுண்மையை விளக்குவது தில்லைப்பொதுநடம் என்றும் கூறப்பட்டுள்ளதைக் கண்டால், சேக்கிழார் வேதாந்தக் கருத்தாகிய அத்வைதவுண்மையைத் தான் விளக்குகிறார் என்பது தெளிவாகும்.*

*பரம்பொருளே மூவகைக் காரணமும் ஆகும் என்பது அத்வைதக் கொள்கை. இதனையே, சேக்கிழார் சுவாமிகள்,*

**அகில காரணமும் ஆனார்**

**தற்குநற் பதிகளும் பிற பணிந்தருளி வண்தமிழ் புனைந்தே.**

*திருஞான சம். 420*

*என்பதிலுள்ள அகில காரணமுமானார் என்னும் பெயராற் குறிப்பிடுகிறார். இதனாலேதான், கடவுள் எப்பொருளுமாய் நின்றார். (திருஞான சம். 399) என்றும், முழுதுமானவர் (திருஞான சம். 375) என்றும்*

**வானாகி நிலனாகி அனலுமாகி**
**மாருதமாய் இருசுடராய் நீருமாகி**
**ஊனாகி உயிராகி உணர்வுமாகி**
**உலகங்கள் அனைத்துமாய் உலகுக்கப்பால்**
**ஆனாத வடிவாகி நின்றார்**

*திருஞான சம். 568.*

*என்றும் அறிவுறுத்தப்படுகிறார்.*

*இவ்வுண்மையே திருஞானசம்பந்த நாயனார் வைகையின் எதிர் செல்ல விடுத்த திருவேட்டிலே பொறிக்கப்பட்டிருந்தது என்பர் சேக்கிழார் சுவாமிகள், 'எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும் என்றெழுதும் ஏட்டில்' (திருஞான சம். 847) என்னும் அடியிலே.*

*'முழுநீறு பூசிய முனிவர் புராண'த்தின் முதற் பாடலிலே, ஆதாரமாய் அனைத்தும் ஆகிநின்ற அங்கணன் எம்பெருமான் என்றுள்ளது. நிர்குணப்பிரும்மமும் சகுணப்பிரும்மமும் ஆகிய பரம்பொருளே இந்த எல்லாப் பொருளாய்த் தோற்றுகின்றது*

*என்பதையே, மீண்டும், இவர் 'திருவாரூர்ப் பிறந்தார் புராண'த்து முதற் செய்யுளில் அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்ற பிரான்' என்று குறிப்பிடுகின்றார். பரம்பொருளே முதற் காரணம் என்னும் உண்மையே*

**ஆயினும் பெரியா ரவர்' என்பது**
**மேய இவ்வியல் பேயன்றி விண்முதற்**
**பாய பூதங்கள் பல்லுயிர் அண்டங்கள்**
**ஏயும் யாவும் இவர்வடி வென்றதாம்.**

*திருஞான சம். 826*

*என்னும் பாடலாலும் விளக்கப்பட்டுள்ளது. அப்பரம் பொருளே மும்மூர்த்தியுமாகி தொல்லுலகம் முழுதும் அளித்தழித்தாக்கும் முதல்வராய் (ஏயர்கோன் 285) விளங்குகின்றது என்று திரிமூர்த்திகளின் அபேதத்தையும் விளக்கிக் காட்டுகிறார். இந்த அபேதத்திற்கு ஒருவமையாய் அமைந்துள்ளது காஞ்சிமா நகரத்திலுள்ள தாள தொன்றினில் மூன்று பூமலருந்தமனியச் செழுந் தாமரைத் தடமும்' என்பதைக் குறிப்பிடுகின்றது திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்திலுள்ள 79-ம் பாடலின் முதலடி.*

*'எரியின்கண் இம்மாய்ப் பொய்தகையும் உருவொழித்து'' (திருநாளைப் போவார் 32) என்றும் இம்மாயப் பவத் தொடக்காம் இருவினைகள் (திருநாவுக்கரசு 423) என்றும் கூறி உருவம், உலகம் இருவினை ஆகிய எல்லாம் பொய்யும் மாயமும் கூறி, உருவம் உலகம் இருவினை ஆகிய எல்லாம் பொய்யும் வல்லிருள் ஞான வெளியாலே தான் நீங்கும் என்று சேக்கிழார் சுவாமிகள்,*

' **தம்மை யேசிந்தியா' எனுன் தன்மைதான்**
**மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென**
**இம்மை யே நினைவார்தம் இருவினைப்**
**பொய்ம்மை வல்லிருள் போக்குவர் என்றதாம். - திருஞான. 830.**

*என்னும் பாடலால் விளக்குகின்றார்.*

*இப்பாடலாலும் எதிரில் இன்பம் இம்மையே தருவார் (ஏயர்கோன் 52) என்னும் அடிப் பகுதியாலும் ஜீவன் முக்தியையும்,*

**நண்ணரிய சிவானந்த ஞானவடிவே யாகி**
**அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அர சமர்ந்திருந்தார்.**

*திருநாவுக்கரசு 427.*

*என்னும் இரண்டு அடிகளால் கிரமமுக்தியையும் கூறி, இந்நாயனார் மோக்ஷத்தைப் பற்றிக் கொண்ட அத்வைதக் கருத்தை நன்கு விளக்குகிறார்.*

**’சிவனடிக்கீழ் உயர்பரம முத்தி பெற்றார்,**
**எவரும் அறியச் சீவன் முத்தராய் இங்(கு) இருப்பவர்கள்;**

*திருத்தொண்டர் புராண வரலாறு 26.*

*என்னும் பாகுபாட்டினை விளக்குவதாயுள்ளது, இருக்குமுதல் மறை நான்கில் இன்று முதலாக இதுவும் ஒரு தமிழ்வேதம் ஐந்தாவதென்று கருத்திருத்திக் கொள்ளப் பெற்றதாய், பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய’ பெரியபுராணம்.*

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

॥ ஓம் லப்தஸர்வாத்மபாவாய வேதாந்தபாஸ்கராய நம: ॥

**ஆத்மஜ்ஞானபலாதேவ ஸர்வாத்மத்வமவாப்தவான் ।**

**வாமதேவமஹர்ஷிர்ஹி தீரோ வேதாந்தபாஸ்கர: ॥**

தீரனாகிய வாமதேவ மகரிஷி ஆத்ம ஞானத்தைப் பெற்று சர்வாத்ம பாவத்தில் நிலைத்து இருந்தார்.

## 12. வாமதேவ மகரிஷியின் உத்காரம்

**தத்தைதத் பச்யன் ருஷிர்வாமதேவ: ப்ரதிபேதே**

**அஹம் மனுரபவம் ஸூர்யச்ச'' இதி ।**

**ப்ரஹதாரண்யகோபநிஷத் 1-4-10**

*அந்த பரமாத்மனே தன்னுடைய ஆத்மாவாகவும் இருக்கிறான் என்கிற சத்தியத்தை அறிந்து கொண்ட வாமதேவர், சூரியனும் நானே, மனுவும் நானே என்று அனுபவத்தில் கண்டு கொண்டார்.*

வாமதேவ மகரிஷி ஆத்மஞானத்தைப் பெற்ற பிறகு கூறிய மந்திரம் இதுவாகும்: 'அஹம் மனுரபவம் சூர்யச்ச'. இதுதான் சர்வாத்மபாவம்.

வாமதேவன் என்று ஒரு மகரிஷி இருந்தார். ''அஹம் ப்ரஹ்மாஸ்மி'', நானே பிரம்மமாக இருக்கிறேன் என்று உணர்ந்தார். அத்தகைய ஆத்மஞானத்தைப் பெற்ற பிறகு 'நான் இந்த வெறும் தேகம் அல்லன், ரிஷியும் அல்லன், அவயவங்கள் அற்ற பரிபூர்ணமாகிய பிரம்மமே நான்' என்று தெரிவிக்கிறார்.

இந்த பிரம்ம ஞானத்தினால் உண்டாகும் பலனே சர்வாத்ம பாவம் ஆகும். நானே மனு, நானே சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள்; ஆத்யாத்மிக, ஆதி பௌதிக, ஆதிதைவிகமான அண்டம் முழுவதும் நானே என்கிற அற்புதமான அனுபவத்தை வாமதேவ மகரிஷி உணர்ந்தவராகிறார்.

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

॥ ஓம் ஆத்மதர்சனரஹஸ்யவிதே வேதாந்தபாஸ்கராய நம: ॥ ॥

**யேன சின்மாத்ரரூபேண சப்தாதீன் வேத்தி மானவ: ।**

**ஆத்மானம் தம் விஜானீயாத் இதி வேதாந்தபாஸ்கர: ।।**

எந்த சின்மாத்ர சொரூபனிலிருந்து சப்தாதிகள் அறியப்படுகிறதோ அவனையே தன்னுடைய ஆத்மா என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

## 13. ஆத்மாவை அறியும் கலை

**யேன ரூபம் ரஸம் கந்தம் சப்தான் ஸ்பர்சாம்ச மைது**

**னான் ந ஏதேனைவ விஜானாதி ।।**

**காடகோபநிஷத் 2-1-3**

*எதன் மூலமாக ஒருவன் காட்சி, சுவை, மணம், ஒலி, தொடு உணர்ச்சி, மற்றும் உடல் இன்பத்தை அறிகிறானோ, அந்த ஆத்மாவே நான் என்று அறிய வேண்டும்.*

இந்த மந்திரம் ஆத்மாவைத் தெரிந்து கொள்ளக் கூடிய கலையை உபதேசிக்கிறது. ஒவ்வொருவனும் தினமும் ஒலி, தொடு உணர்ச்சி, காட்சி, சுவை, மணம் முதலியவற்றை அறிகிறான் இல்லையா ? இந்த அறிவு அவனுக்கு எவரிடம் இருந்து எவ்வாறு உண்டாகிறது? தேகம், இந்திரியங்கள், புத்தி இவை யாவும் அசேதன மானவை! அவ்வாறெனில் வெளியில் இருக்கக் கூடிய காட்சிகள் மற்றும் உள்ளே இருக்கக் கூடிய சுக துக்கங்களையும் அறியக் கூடியவன் யார் ? அவன் தான் ஆத்மா.

உடல் முதலான ஸங்காதம் (தொகுப்பு) யாவும் அசேதனமாக இருப்பதால் இவற்றிற்கு ஒலி முதலியவற்றை அறிய முடியாது. இந்த ஸங்காதத்திற்கு வேறாக ஆத்மா இருப்பதினாலேயே இவற்றை நம்மால் அறிய முடிகிறது. இத்தகைய சின்மாத்திர சொரூபனாக இருக்கக் கூடிய ஆத்மாவே நான் என்று அறிந்தவனே ஆத்மஞானி. இதுவே, ஆத்மாவை அறியும் கலையாகும்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

இந்த மனஸ் செய்யும் வேலைகள் அனந்தம், அதேமாதிரி நினைவுகளும் அனந்தம். இது தான் நடுவில் இருந்து கொண்டு மனிதர்களின் அனர்த்ததிற்கு காரணமாக உள்ளது. இது எதை சிந்திக்கிறதோ அதை வாக்கால் மனிதன் சொல்கிறான். கரங்களால் வேலையைச் செய்கிறான். அச்சம், ஆனந்தம், விருப்பு, வெறுப்பு, பொறாமை, மகிழ்ச்சி இப்படி எல்லாவித உணர்ச்சிக்கும் காரணமாயுள்ளது இந்த மனம். மனம் செயலற்றுப் போனால் ப்ரம்ம நிலை என்று வேதாந்தம் கூறும்.

அதை அடக்க எத்தனையோ உபாயங்கள் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டிருப்பினும் அவ்வளவு எளிதன்று.கோடியில் ஒருவர் வெற்றி பெறலாம் என்னும் நிலைதான் இருக்கு. கெட்ட எண்ணங்கள் இல்லாமல் நல்ல எண்ணங்கள் மனதில் தோன்றினாலே போதும். இதுவும் கடினம் தான். மனம் இல்லாத நிலை இருக்கட்டும் நல்ல ஆக்க பூர்வ எண்ணங்கள் தோன்றினாலே சிறப்புதான். இப்படி பௌராணிகர் பேசியதைக் கேட்ட சிஷ்யன் ' நீங்கள் என்ன கதை சொல்லப் போகிறீர்' என்று ஆவலுடன் கேட்க அவர் தொடர்ந்தார்.

மனசில நல்ல எண்ணம் வரணும் அப்படீன்னு சொல்றேனே அந்த மாதிரி யாரேனும் இருந்தார்களா இப்படிக்கூட நடக்குமா என்று வியக்கலாம். இந்த மனதில் புனிதமான எண்ணத்துடன் ஒருவர் இருந்தார். அவர் மனத்தினால் செய்ததை இறைவனே அங்கீகரித்தார். அந்த நபரும் பெரும் புகழ் அடைந்தார். அவர் பெயர் பூசலார். அவர் பிறந்தது திருநின்றவூர். அந்தணர் செல்வம் அதிகமாக இல்லாதவராயினும் கேள்வி ஞானம் மிகுந்தவர். சாத்திரம் அறிந்தவர். கிடைத்த செல்வத்தை சிவனடியார்களுக்கு உதவினார்.

சிவபெருமானுக்கு கோவில் அமைக்க எண்ணினார். அதற்குரிய செல்வம் அவரிடமில்லை. பல பேரிடம் கேட்டும் போதிய அளவு கிடைக்கவில்லை. வருந்தினார். ஆனால் ஓர் யுக்தி செய்தார். மனசிலேயே கோவில் கட்ட முனைந்தார். மனசிலேயே அதற்குறிய நிலம், அதை சீர்படுத்துதல், கடை கால், ப்ராகார நிர்மாணம், கோபுரம், கலசங்கள், சுற்றுச் சுவர், கருவறை அதில் சிவலிங்கப் ப்ரதிஷ்டை இவை

யாவையும் செய்யக் கூடிய தச்சர், கட்டடக் கலைஞர் எல்லாவற்றையும் முறைப்படி நிர்ணயித்தார். மனதில் மிக்க மகிழ்ச்சி கொண்டார்.

கோவிலுக்கு குடமுழுக்குச் செய்ய எண்ணி அதற்குறிய நாலையும் குறித்தார். அந்த நாளையும் எதிர்பார்த்துக் காத்திருந்தார். அதே சமயம் காஞ்சி மா நகரில் ஐயவர் காடவர்க் கோன் என்னும் பல்லவ மன்னன் தானும் ஒரு சிவாலயத்தைக் கட்டி முடித்து அதற்குரிய குட முழக்கு நாளையும் குறித்தான்.

இவன் குறித்த நாளும் பூசலார் குறித்த நாளும் ஒரே நாளாயிற்று. பக்தியின் பெருமையையும் பக்தனின் பெருமையையும் தெரியப்படுத்த சிவபெருமான் மன்னன் கனவில் தோன்றி தான் பூசலார் குடமுழுக்குக்குப் போகயிருப்பதால் அவனுடைய குட முழுக்குக்கு வரமுடியாத நிலை என்று தெரியப்படுத்தினார். அவனுக்கு ஆச்சர்யம். உடனே திருநின்றவூர் சென்றான்.

பூசலாரைத் தேடினான். அவரும் வந்தார். கோவிலைக்காட்டச் சொல்ல மிகவும் அச்சத்துடன் தான் மனதில் கட்டிய கோவிலை விளக்கினார். மன்னன் வியந்து போனான். அவரை வணங்கி நின்றான். இது தான் கதை. இதில் கவனிக்க வேண்டிய விஷயம் பக்திக்குக் கட்டுப்படுபவன் இறைவன். பக்தனுக்காக எதுவும் செய்வான் அவன் என்பதே. ஸ்தூலமாக உள்ள கோவிலை விட்டு நுண்னியமாக உள்ள கோவிலுக்கு முக்யம் தந்ததே சிறப்பு. மேலும் மனதில் நல்ல பவித்ரமான எண்ணம் எவ்வளவு வலிமை வாய்ந்தது அது அனைவருக்கும் எவ்வளவு அவஸ்யம் என்பது இதன் தாத்பர்யம் என்று கூறி ஓய்ந்தார் பௌராணிகர்.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை ।। 12 ।।**

*உண்பவர்களுக்கு நல்ல உணவுகளை உண்டாக்கிக் கொடுப்பதும், உண்பவர்களுக்குத் தானும் உணவாக ஆவதும் மழையே (நீரே) ஆகும். (உணவுக்கு முக்கிய காரணமும் துணைக் காரணமும் நீரேயாகும்).*

*தண்ணீரின் தேவதைகளே ! தண்ணீர் நாங்கள் குடிப்பதற்கு உகந்தது ஆகட்டும். நீங்கள் எங்களுக்கு மங்களத்தைத் தாருங்கள்.*

*(ரிக் வேதம்: மார்ஜன மந்த்ரம் : 8-352)*

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

எஸ். நாகராஜ் பெங்களூர்



*1973 ஆரணி பக்கத்தில் ஸத்ய விஜய நகரத்தில் பெரியவா முகாமிட்டிருந்தார்.*

*வரலக்ஷ்மீ வ்ரதத்திற்காக என் மனைவியுடன் நான் அங்கு போயிருந்தேன். பூஜை முடிந்தவுடன் என் தாயார் 'அம்மன் முகம் தெரியவில்லை '' என்று கூற அவரை வேலூர் கண் ஆஸ்பத்ரிக்கு அழைத்துச் சென்றேன். பரிசோதித்த டாக்டர் காட்ராக்ட் முற்றவில்லை 2 வாரம் கழித்து ஆபரேஷன் செய்யலாம் என்று கூறி சொட்டு மருந்து கொடுத்தார். மறு நாள் தாயாரும் தந்தையும் ஆஸ்பத்ரிக்குச் சென்றனர். அப்போது என் தந்தையின் டாக்டர் நண்பர் அங்கு எதேச்சையாய் வந்திருந்தார், விஷயம் தெரிந்து தாயாரின் கண்களை பரிசோத்தித்துவிட்டு 'இன்னும் இரண்டு தினங்களில் நான் அமெரிக்கா போகிறேன்.*

*நாளையே இரண்டு கண்களுக்கும் ஆபரேஷன் செய்யலாம் என்றார். ஆபரேஷனும் வெற்றிகரமாக நடந்தது. 'எப்படி இரண்டு ஆபரேஷங்களையும் தாங்கிக் கொண்டீர்கள்' என்று கேட்டதற்கு ஸ்ரீ பெரியவாளை நினைத்து ஒவ்வொரு நிமிடமும் த்யானித்தேன். அவர் பயப்படாதே நானிருக்கிறேன்' என்று சொல்லி கூடவே இருந்தாற் போல் இருந்தது என்றார். கண் சரியானதும் நாங்கள் அவரை தர்சிக்க தேனம்பாக்கம் வந்தோம். ஸ்ரீ பெரியவா த்யானத்தில் இருந்தார். மத்யானம் திடீரென்று கண்களைத் திறந்து பார்த்தார். அவர் தாயாரைப் பார்த்து கேட்டார். 'இப்போ கண் தெரியறதா?'' தெரிகிறது என்றாள் என் தாயார்.*


*'இரண்டு கண்ணும் '' என்றார் பெரியவா இரண்டும் தெரியறது '' என் தாயார். என்னை நன்னா தெரியறதா? '' ஆமாம். மகிழ்ச்சியுடன் என் தாயார் கூறினார். நாங்கள் உட்கார்ந்திருந்தபோது திடீரென்று புறப்பட உத்தரவு வந்தது. நாங்கள் திகைப்புடன் ஜட்காவில் உட்கார ஒரு பெரியவர் 'இதை பெரியவா கொடுக்கச்சொன்னா'' என்று ஒரு ஆரஞ்சு பழத்தைத் தந்தார். மகிழ்ச்சியுடன் ஸத்ய விஜய நகரத்திற்குத் திரும்பினோம். அப்போது ஒரு தந்தி வந்தது. அதில் பெங்களூரில் எங்கள் வீட்டில் திருட்டு நடந்திருப்பதாகவும் உடனே வரவும் என்று கண்டிருந்தது. பதற்றத்தில் இருந்த எங்களை ஒன்றும் பயப்படாதே மஹா பெரியவா பார்த்துப்பா' என்று ஆறுதல் சொன்னாள் என் தாயார்.*

*(தொடரும்)*


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்''
## என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும்**

**ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர். **வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

## ஸௌப்திக பர்வம்



அர்ஜுனனும் அஸ்வத்தாமாவும் ஒருவருக்கொருவர் விடக்கூடிய அஸ்த்ரம் மகா நாசத்தை விளைவிக்கும் என்று அறிந்து வ்யாஸரும் நாரதரும் அதைத் தடுக்க வந்து இருவரிடமும் அஸ்த்ரங்களைத் திரும்பப்பெற வேண்டினர். அர்ஜுனன் உடனே திரும்பப் பெற்றுக் கொண்டான். அஸ்வத்தாமவோ தனக்கு அதைத் திரும்பப் பெற வழி தெரியாது எனவே இந்த அஸ்த்ரம் உத்தரையின் கர்பத்தை அழிக்கும் என்று கூறி அஸ்த்ரத்திப் ப்ரயோகித்தான்.

அவன் உத்தரையயின் கர்பத்தை அழிக்க அஸ்த்ரம் எய்தது கண்டு க்ருஷ்ணர் 'நான் அந்த கர்பத்தைக் காப்பேன். அவனே 'பரீக்ஷித்'' என்னும் பெயரோடு உலகில் ப்ரசித்தி பெற்று வாழ்வான். ஹே! ப்ராம்மண அதமனே அஸ்வத்தாம யாரும் நினைக்கவே கூசும் செயலைச் செய்து அவப்பெயர் பெற்றுள்ளாய்.

மூவாயிரம் வருடம் உருத்தெரியாமல் இருந்து இவ்வுலகில் அலைவாய். உன் தலையில் உள்ள மணியை பாண்டவர்களிடம் கொடு. எங்கள் முன் நில்லாதே நீசனே போ என்று கூற அவனும் அந்த மணியை யுதிஷ்டிரனிடம் தந்தான். பின் காட்டினில் மறைந்து போனான். அவன் தந்த அந்த மணியை பாண்டவர்கள் க்ருஷ்ணனுடன் த்ரௌபதியிடம் தர அவள் ' குருவின் புத்ரன் குருவிற்குச் சமானம். இந்த மணி மூலம் பழி தீர்த்துக் கொண்டேன். களங்கமில்லாத் யுதிஷ்டிரர் இதை அணிந்து கொள்ளட்டும்' என்று கூறினாள். யுதிஷ்டிரர் அதை தன் தலையில் அணிந்து கொண்டார். மாமலை மீது சந்த்ரன் ஒளி வீசுவது போல் அந்த வைபவம் இருந்தது.

ஸௌப்திக பர்வம் முற்றும்

# தசாவதார ஸ்தோத்ரம்

# दशावतार स्तोत्रम्

ஜயதேவர்

क्षत्रिय रुधिरमये जगदपगत पापमब स्नपयसि पयसि शमित भवतापम्
केशव धृत भ्रुगुपति रूप जगधीश हरे जय जगधीश हरे ।। ६ ।।

**க்ஷத்ரிய ருதிரமயே ஜகதபகதபாபம் ஸ்னபயஸி பயஸி ஸமித பவதாபம்**
**கேசவ த்ருத ப்ருகுபதிரூப ஜகதீச ஹரே ஜய ஜய ஜகதீச ஹரே ॥ 6 ॥**

*கேசவனே ! ப்ருகு குல திலகனாய் பரசுராம ரூபத்தில் க்ஷத்ரியர்களைக் கொன்று உதிரத்தால் லோகதாபத்தை தீர்த்தாய். ஜகதீசனே உனக்கு ஜயம்.*

वितरसि दिक्षु रणे दिक्पति कमनीयम् दशमुख मौलि बलिम् रमणीयम्
केशव धृत राम सरीर जय जगधीश हरे जय जगधीश हरे ।। ७ ।।

**விதரஸி திக்ஷு ரணே திக்பதி கமனீயம் தசமுக மௌலி பலிம் ரமணீயம்**
**கேசவ த்ருத ராம சரீர ஜய ஜகதீச ஹரே ஜய ஜகதீச ஹரே ॥ 7 ॥**

*கேசவ! ரகுகுல திலகனாய் ராமனாய் அவதரித்து தச திக் பாலகர்களுக்கு ராவணனின் பத்து தலைகளையும் பலி இட்டாய். ஜகதீசனே உனக்கு ஜயம்.*

वहसि वपुषि विशदे वसनम् जलजलदाभम् हलहति भीतिमिलितयुगनाभम्
केशव धृत हलधर रूप जय जगधीश हरे जय जय जगधीश हरे ।। ८ ।।

**வஹஸி வபுஷி விஸதே வஸனம் ஜலதாபம் ஹலஹதி பீதி மிலிதயுக நாபம்**
**கேசவ த்ருத ஹலதர ரூப ஜய ஜகதீச ஹரே ஜய ஜய ஜகதீச ஹரே! ॥ 8 ॥**

*கேசவ! பரசு தரித்தவனாய் உன் கலப்பையால் யமுனை போல் இழுக்கப்பட்டு விடுவோமோ என்றஞ்சுவது போல் நீருண்ட மேகம் போல் மேலாடையை அணிந்தவனே ஜகதீசனே உனக்கு ஜயம்.*

निन्दसि यग्यविधेरहह श्रुतिजातम् सदयहृदय दर्शितपशुघातम्

केशव ध्रुत बुद्दशरीर जय जगधीश हरे जय जगधीश हरे ।। ९ ।।

**நிந்தஸி யக்யவிதேரஹஹ ஸ்ருதிஜாதம் ஸதய ஹ்ருதய தர்சித பசுகாதம்**

**கேசவ த்ருத புத்தசரீர ஜய ஜகதீச ஹரே ஜய ஜகதீச ஹரே ॥ 9 ॥**

*புத்தர் என்னும் ரூபத்தில் தயை உடைய மனதினனாய் ஸ்ருதியின் வேள்வி கண்டனம் செய்தாய். ஜகதீசனே உனக்கு ஜயம்.*

म्लेच्छ निवह निधने कलयसि कर वालम् धूमकेतुमिव किमपि करालम्

केशव ध्रुत कल्कि शरीर जय जगधीश हरे जय जगधीश हरे ।। ५ ।।

**ம்லேச்ச நிவஹ நிதனே கலயஸி கர வாலம் தூமகேதுமிவ கிமபி கராலம்**

**கேசவ த்ருத கல்கிசரீர ஜய ஜகதீச ஹரே ஜய ஜகதீஸ ஹரே ॥ 10 ॥**

*கேசவ! தூமகேது போல் உள்ள ஒரு வாளுடன் துஷ்ட நிக்ரஹத்திற்காக கல்கியாய் அவதரிக்கிறாய். ஜகதீசனே உனக்கு ஜயம்.*

श्री जयदेवकवेरिदमुदितमुदारम् श्रुणु शुभदम् सुखदम् भवसारम्

केशव ध्रुत दशविधरूप जय जगधीश हरे जय जगधीश हरे ।। ११ ।।

**ஸ்ரீ ஜயதேவகவேரித முதித முதாரம் ஸ்ருணு சுபதம் ஸுகதம் பவஸாரம்**

**கேஸவ த்ருத தஸவித ரூப ஜய ஜகதீச ஹரே ஜய ஜகதீச ஹரே ॥ 11 ॥**

*கேசவ! தூமகேது போல் உள்ள ஒரு வாளுடன் துஷ்ட நிக்ரஹத்திற்காக கல்கியாய் அவதரிக்கிறாய். ஜகதீசனே உனக்கு ஜயம்.*